பக்கங்கள்: 13

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 28 திங்கட்கிழமை 11.03.2024 கதிர் 125

# ரணில் எப்போதும் மோசமான அரசியலையே செய்து வருகிறார்

## அனுர குமார திஸநாயக்க சாடல்

ரணில் விக்கிரமசிங்க எப்போதும் மோசமான அரசியலையே முன்னெடுக்கின்றார். 2022ஆம் ஆண்டுக்குப் பின்னர் மாற்றம் கண்ட மக்கள் படையினருடன் தேசிய மக்கள் சக்தியினர் புதிய அரசியலை முன்னெடுத்துள்ளனர். என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட மகளீர் மாநாடு நேற்று ஹோமாகவில் நடைபெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில் விக்கிரமசிங்க ☞2



## இனி இது ரகசியம் அல்ல!

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஓரிரு நாள்களின் முன்னர் ஒரு புத்தகம் வெளியிட்டார். தான் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டது தொடர்பில் அந்தப் புத்தகத்தில் அவர் விளக்கி இருந்தார். 'ஜனாதிபதிப் பதவியிலிருந்து என்னை அகற்றுவதற்கான சதி' என்ற பெயரில் அவர் அந்தப் புத்தகத்தை வெளியிட்டிருந்தார்.

வெளிநாடுகளின் குறிப்பாக மேற்குலக நாடுகளின் சதியின் காரணமாகவே தான் பதவி கவிழ்க்கப்பட்டார் என்று அவர் அந்தப் புத்தகத்தில் தெரிவித்திருந்தார். ஒரு காலத்தில் தன்னுடைய படைத்துறைச்சகாக்களான முப்படைப் பிரதானி சவேந்திர சில்வாவுக்கும் பாதுகாப்புச் செயலாளரான கமல் குணரத்னவுக்கும் இடையில் ☞2

## படையினர் பிடியிலிருந்து 109 ஏக்கல் நிலம் விடுவிப்பு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இராணுவத்திடம் இருந்த 109 ஏக்கர் காணிகள் மக்களிடம் பாவனைக்காக விடுவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஆவணங்களைக் கையளிக்கும் நிகழ்வு யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் - வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் பாதுகாப்பு பிரிவினரின் கட்டுப்பாட்டில் இருந்த மக்களின் ஒரு தொகுதி ☞2

### சிவராத்திரியை தடுத்துக் குழப்பிய பொலிஸாரின்

## வெடுக்குநாறி மலை அட்டகாசத்தை கண்டித்து மட்டு. நகரில் ஆர்ப்பாட்டம்






வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோயிலில் சிவராத்திரி நாள் இரவு பூசைவழிபாடுகளைக்குழப்பி அங்கிருந்த பக்தர்களைக் குண்டுக்கட்டாகத் தூக்கி வீசி பொலிஸார் அப்புறப்படுத்தியதைக் கண்டித்து மட்டக்களப்பில் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ☞11

## வெடுக்குநாறி மலைக் கைதுகளுக்கு பல்கலை ஆசிரியர் சங்கம் கண்டனம்

வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் தலத்திலே வழிபாட்டிலே ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயக் குருக்கள், பொது மக்கள், அரசியல் தலைவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட அத்துமீறல்களினையும், அவர்கள் அங்கு இருந்தோரிலே பலரினைக் கைது செய்தமையினையும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் தலத்தில் சிவராத்திரி தினத்தன்று பொலிஸார் மேற்கொண்ட கண்டித்து வெளியிட்ட ☞2

## வெடுக்குநாறிப் பிரச்சினையில் ஜனாதிபதியின் தலையீடு தேவை

### அங்கஜன் எம்.பி. கோரிக்கை

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விவகாரத்தில் ஜனாதிபதி தலையிட்டு தீர்க்கவேண்டும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அங்கஜன் இராமநாதன் வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய வழிபாட்டு உரிமையை மீளவும் சைவத்தமிழ் மக்களுக்கு பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி விரைந்து நடவடிக்கைஎடுக்கவேண்டும்.

பரம்பரை பரம்பரையாக வெடுக்குநாறி மலையில் ☞2

## நாளாந்த நீர்ப் பயன்பாடு வறட்சி காரணமாக உயர்வு

நிலவும் அதிக வறட்சியுடனான வானிலையினால் நாளாந்த நீர் பயன்பாட்டின் அளவு உயர்வடைந்துள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரதி பொது முகாமையாளர் அனோஜா களுஆரச்சி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீரின் பயன்பாடு அதிகரித்துள்ளமையினால் நாளாந்தம் 2000இற்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன.

நீர் விநியோகம் தொடர்பான சிக்கல்கள் குறித்து 1939 எனும் துரித அழைப்பு இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி முறைப்பாடு செய்ய முடியும்.

அத்துடன், அம்பத்தலை மற்றும் பியகம நீர் விநியோக மத்திய நிலையங்களில், ☞2

## 2ஆம் லெப். மாலதி படத்துடன் கிளிநொச்சியில் மகளிர் நாள்



இலங்கைத் தமிழரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்ட மாதர் முன்னணியினரின் ஏற்பாட்டில் 'பன்னாட்டு மகளிர் நாள்- 2024' நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது. விடுதலைப் புலிகளின் முதல் பெண் போராளி ☞8

## இந்திய மீனவர் பிரச்சினைக்கு ராஜதந்திர ரீதியிலேயே தீர்வு

### காணவேண்டும் என்கிறார் சாகல

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வந்து இலங்கை எல்லைக்குள் மீன்பிடிப்பது தொடர்பான பிரச்சினைகளை இராஜதந்திர ரீதியிலேயே தீர்க்க வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்பாணத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: -

இந்தியாவிலிருந்து கடற்றொழிலாளர்கள் இந்தப் பகுதிக்கு ☞2

## வெடுக்குநாறி மலையில் தீ மூட்டியதுதான் பிரச்சினை

### இப்படிச் சொல்கிறார் பொலிஸ் பேச்சாளர்

வெடுக்குநாறிமலையில் இரவில் தீ மூட்டி வழிபாடுசெய்தமைதான் அங்கிருந்து பக்தர்கள் வெளியேற்றப்படுவதற்குக் காரணம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ பொலிஸ் திணைக்களத்தின் தலைமையகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெடுக்குநாறிமலைப் பகுதியில் சட்டத்துக்கு மீறிச் செயற்பட்ட எட்டுப் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கான மருத்தவப் பரிசோதனைகள் இன்று (நேற்று) நடைபெற்றுள்ளன. ☞2

## ரணிலின் பயணத்தைத் தடுப்பது பொருளாதார மீட்சியை தடுக்கும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதி ஆசனத்தில் அமருவதற்கான பயணத்தை தடுப்பதானது, நாட்டின் பொருளாதார மீட்சியை தடுக்கும் செயற்பாடாகவே இருக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

குளியாப்பிட்டியவில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது மக்கள் சந்திப்புக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எப்போதும் எமது மக்களை கோபத்துக்கு உள்ளாக்கி, அவர்களின் இரத்தினை சூடாக்கி அந்த மக்களை நெருக்கடியில் தள்ளிவிட முடியாது. குறிப்பாக கூறுவதாக இருந்தால் தொங்கு பாலத்திலிருந்து ஆழமான பாலத்திற்கு தள்ளிவிட முடியாது.

ஆகவே, நாம் அனைவரும் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

காணப்பட்ட உள்முரண்பாடு காரணமாகமக்களின்கிளர்ச்சியைக் கட்டுப்படுத்தத்தக்க வகையில் படையினரை ஒருங்கிணைக்க முடியவில்லை என்றும் அவர் அந்தப் புத்தகத்தில் கூறியிருந்தார்.

இந்த அனுபவங்களின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதுவர்கள் படைத்துறை அதிகாரிகளை நேரில் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு அனுமதிக்கக்கூடாது என்ற பரிந்துரையையும் அவர் வழங்கியிருந்தார். அவரது புத்தகத்திற்குக் கொழும்பில் கடும் கிராக்கி இருந்ததாகவும் முதல் பதிப்பில் வந்த பிரதிகள் அனைத்தும்விற்றுத்தீர்த்துவிட்டன என்றும் ஒரு சில செய்திகள் வந்தன. அதன் உண்மை பொய் தெரியவில்லை என்றாலும், மக்களின்கிளர்ச்சியைஅவர்வெறும் சதி என்று கூற விளைவதற்குக் கண்டனங்களும்வராமல்இல்லை. கோட்டாபயவின் மிக மோசமான ஆட்சி காரணமாகவே மக்கள் அரகலய கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள் என்று கோட்டாவின் கருத்தை மறுத்து பல அரசியல் தலைவர்கள் கருத்துக்களை முன்வைத்தார்கள்.

வெளியிலிருந்து மட்டுமல்ல கோட்டாவின் பொது ஜன பெரமுன கட்சிக்குள் இருந்தேகூட அவருக்கு எதிராகக் கண்டனங்கள் முன்வைக்கப்படுகின்றன. கோட்டாபய ராஜபக்ச எத்தனை நூல்களை எழுதினாலும் சரி, அவர் தனது பொறுப்பை ஒழுங்காக நிறைவேற்றவில்லை என்பதுதான் உண்மை என்று அனுராதபுரம்மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் சந்திரசேன தெரிவித்துள்ளார்.

''கோட்டாபய ராஜபக்சவை ஆயிரம்நம்பிக்கையுடன்ஆட்சிக்குக் கொண்டு வந்தோம். கடைசியாக, 'சிரிசங்கபோ' போல்தன்தலையை தானம்செய்துவிட்டுப்போய்விட்டார். நாங்கள்அதைஎதிர்பார்க்கவில்லை. அவர் எத்தனை புத்தகங்கள் எழுதினாலும், தன் பொறுப்பைச் சரியாக நிறைவேற்றவில்லை என்பதே உண்மை" என்றார் அவர்.

அவரது கருத்து மிகவும் சுவாரஸியமானது. இலங்கை வரலாற்றிலிருந்து அவர் கோட்டாபயவுக்கு உதாரணம் காட்டினார். ஆனால், துரதிஷ்டவசமாக அந்த உதாரணத்திலும் ஒரு கோட்டாபய சம்பந்தப்பட்டிருக்கிறார். அதில் அவர் அதிகாரத்திற்கு வந்தார். இதில் கோட்டாபய ராஜபக்ச அதிகாரத்தை இழந்தார் என்பதுதான் சுவாரஸியமானது.

சிறி சங்க போ இலங்கையை ஆண்ட மன்னன். கிறிஸ்துவுக்குப் பின்னர் 238 முதல் 240 வரை ஆட்சி நடத்தியவன். சங்க திஸ்ஸ மன்னனின் இறப்புக்குப் பின்னர் சிறி சங்க போ ஆட்சியாளரானார். அவர் மிகவும் தெய்வீகமான அரசர் என்று சொல்லப்படுகின்றது, அவர் பல புண்ணிய செயல்களைச் செய்தார்.

மன்னர் சிரி சங்க போவின் காலத்தில், சிவப்பு கண் நோய் நாடு முழுவதும் பரவியது. இந்த நோய் 'ரடக்கி' என்ற பிசாசினால் ஏற்பட்டது என்று எல்லோரும் நம்பினார்கள். இந்நோயினால் பலர் உயிரிழந்தனர். மன்னன் சிறி சங்க போ தரையில் படுத்துக் கொண்டு, ரதக்கி தன்னிடம் வராவிட்டால், தரையில் இருந்து எழுப்பமாட்டேன் என்று வேண்டினான். மன்னன் விரும்பியபடி, 'ரடக்கி' பிசாசு மன்னன் முன் வந்தது.. மன்னன் அந்தப் பிசாசிடம் மக்களை நோயிலிருந்து காப்பாற்றும்படி கேட்டான். ரடக்கி அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. தனக்கு பாதி நாடு வேண்டும் என்று ரடக்கி கேட்டது. இது சாத்தியமற்றது என்று ராஜா கூறினார். கடைசியாக ரடக்கி ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒவ்வொருநாளும்காணிக்கைகளை ஏற்க ஒப்புக்கொண்டது என்கின்றன கதைகள்.

இப்படிப்பட்ட ஒரு மன்னனின் ஆட்சியை அவரது முன்னாள் நண்பரான கோத்தபாயவால் ஏற்கமுடியவில்லை. இவனெல்லாம் ஆளவே தகுதியற்றவன் என்று கருதிய கோத்தபாய கிளர்ச்சியில் ஈடுபட்டார். சிறிசங்கபோமன்னருக்கு எதிராக அவர் கிளர்ச்சியைத் தொடங்கியதும் மன்னர் போரிட மறுத்துவிட்டார். அரசாட்சியைத் துறந்துவிட்டு வெளியேறினான். கோத்தபாய ஆட்சியைப் பிடித்தான். கிபி 240இல் அவன் அரசனான். ஆனால், சண்டை பிடிக்காமல் ஓடிவிட்ட மன்னர் சிறி சங்க போ படை திரட்டிக் கொண்டு திரும்பி வருவானோ என்ற அச்சம் அவனை ஆட்டிப் படைத்தது. அதனால் மன்னன் சிறி சங்க போவின் தலையைக் கொண்டு வருபவர்களுக்கு பரிசு என்று அறிவித்தான்.

ஆட்சியை விட்டுவிட்டு வெளியேறிய சிறீ சங்கபோவோ காட்டில் அலைந்துகொண்டிருந்தார். தன் தலைக்கு விலை வைக்கப் பட்டிருப்பது அவருக்குத் தெரிந்திருந்தது. ஒரு நாள் காட்டில், சிறி சங்கபோ மிகவும் ஏழை ஒருவரைச் சந்தித்தார். அந்த ஏழை தன் தலையைக் கொண்டுபோய் மன்னிடம் கொடுத்தால் அவனுக்குப் பணம் கிடைக்கும் என்று கருதிய சங்கபோ, தன் தலையைக் கொய்து அந்த ஏழையிடம் கொடுத்தான்.

சங்க போ கூடியபடியே அந்த ஏழையும் மன்ன் கோத்தாபயவிடம் அந்தத் தலையைக் கொண்டு சென்றான். மன்னுக்கோ அந்தத் தலை சிறி சங்க போவுக்கு சொந்தமானதா என்று சந்தேகம். அப்போது அந்தத் தலை பேசத் தொடங்கியதாம். தான் சிறி சங்க போவின் தலைதான் என்றும் மன்னன் அறிவித்தது போன்றே அவனுக்கு பரிசு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டதாம். உடனே மன்னனும் அந்த ஏழைக்குப் பரிசுகளை வழங்கி அனுப்பி வைத்தானாம்.

அத்தகைய சிறி சங்க போ போலத்தான் கோட்டாபய ராஜபக்சவும் தன் தலையைக் கொண்டுபோய் ரணிலிடம் கொடுத்துவிட்டார் என்று வைதிருக்கிறார் அனுராதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எப்போதும் மோசமான அரசியலையே முன்னெடுக்கின்றார். 2022ஆம் ஆண்டுக்குப் பின்னர் மாற்றம் கண்ட மக்கள் படையினருடன் தேசிய மக்கள் சக்தியினர் புதிய அரசியலை முன்னெடுத்துள்ளனர்.

தற்போது அதிகாரத்தில் இருப்பவர்களும்சரி, அதிகாரத்துக்குவருகை தருவதற்கு விரும்புவர்களுக்கும் சரி போதுமான அளவிற்கு நிதி உள்ளது. ஊடகங்கள் உள்ளன. ஆனால் எமக்கென்று என்ன உள்ளது. எம்மிடம் உள்ளது இந்த அரங்கு முழுவதும் கூடியுள்ள பொதுமக்களாகிய நீங்களே. நீங்கள் மட்டுமே எமக்குள்ள ஒரே பலமாகும்.

தற்போது ரணில் விக்கிரமசிங்கவிடத்தில் ரூபவாஹினி இருக்கின்றது. ஆனால் எம்மிடத்தில் உள்ள ஒவ்வொரு பெண்களுமே ரூபவாஹினிதான். ரணில் விக்கிரமசிங்க தரப்பினர் எமக்கு எதிராகப் பரப்புரை செய்வதற்கு எம்மவர்களையே தெரிவு செய்துள்ளார்கள். உண்மையில் அவர்கள்பாவம். வேறுயாரையாவது தெரிவு செய்திருக்கலாம். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

அவர்களின் திட்டப்படி, முதலாவது பரப்புரைக் கூட்டத்தில் 78, 80களில் நடைபெற்ற விடயங்களை வெளிப்படுத்தி மக்களை அச்சமூட்டுவதை இலக்காக கொண்டுள்ளனர். இரண்டாவது பரப்புரையில் ஜே.வி.பி ஆளும் தரப்பினருடன் இருந்தவர்கள் என்று கூறப்போகின்றார்.

மூன்றாவது பரப்புரையில் நன்கு அறிந்த தகுதிவாய்ந்த ஒருவரைக்கொண்டுவர வேண்டும் என்று கூறப்போகின்றனர். இவ்வாறு தான் அவர்களின் மிக மோசமான வெளிப்படுத்தல்களைச் செய்கின்றனர். எமக்கு எதிராகவே இலக்குவைத்து செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர் - என்றார்.

## நாளாந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேற்றுநீர் உட்புகுவதைத் தடுப்பதற்காக நிர்மாணிக்கப்படும் தற்காலிகதடுப்புச்சுவரின்கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளது.

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிகள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இராணுவ பாதுகாப்பு பிரிவினரின் கட்டுப்பாட்டில் இருந்த காணிகள்யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்ட பதில் அரசாங்க அதிபரிடம் கையளிக்கும் நிகழ்வு நநேற்று) யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில்பிரதமஅதிதியாக ஜனாதிபதி அலுவலகத்தின் தேசிய பாதுகாப்புதொடர்பானஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானியுமான சாகல ரட்நாயக்க கலந்துகொண்டு காணி உரிமையாளர்களுக்கான காணிப் பத்திரங்களை வழங்கி வைத்தார்.

இதில் கடற்றொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாணபாதுகாப்புபடைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமரட்ன, ஜனாதிபதி செயலக வட மாகாண இணைப்பாளர் எல்.இளங்கோவன், முன்னாள் அரசாங்க அதிபர்கள் பாதுகாப்பு படையினர், கடற்படையினர், பிரதேச செயலாளர்கள், ஜனாதிபதி செயலக உயர் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகை தருவதும், அவர்களினது செயற்பாடுகள் தொடர்பிலும் கரிசனைகள் உள்ளன. இராஜதந்திர ரீதியிலேயே இந்தப் பிரச்சினையை தீர்த்துக்கொள்ள வேண்டும்.

நாம் இதயசுத்தியுடனான கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம். இலங்கையின் கடல் எல்லையை தாண்டி மீன்பிடியில் ஈடுபடுவதென்பது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படாதவொரு விடயமாகும்.

கடற்றொழிலாளர்கள் அத்துமீறி சட்டவிரோத மீன்பிடி கலன்களை பயன்படுத்துவதால் கடற்பரப்பு பாதிக்கப்படுகின்றனது. வளங்கள் அழிகின்றன. இதற்கானசேதங்களை யார் வழங்குவது?.

நாம் அதுதொடர்பில் கலந்துரையாடுவதற்கு தயாராகவுள்ளோம். அதன் மூலம் நிரந்தரமான தீர்வினை எதிர்ப்பார்க்கின்றோம். அதேநேரம் சர்வதேச அழுத்தமும் எமக்கு உருவாகின்றது, குறிப்பாக கடற்பரப்பின் சுற்றாடல் தொடர்பில் அந்த அழுத்தம் ஏற்படுகின்றது என்றார்

## வெடுக்குநாறிப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்துள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தை சைவத்தமிழ் மக்கள் வழிபட்டு வந்த நிலையில் கடந்த 2018ஆம் ஆண்டு முதல் தொல்லியல் திணைக்களம் மற்றும் வனவளத் திணைக்களம் ஆகியன மக்களுடையவழிபாட்டுஉரிமையை கேள்விக்குட்படுத்தியிருந்தன.

அன்றிலிருந்து இன்று வரை பரம்பரை பரம்பரையாக ஆதிலிங்கேஸ்வரரை வழிபட்ட மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

கடந்தவருடம்கூட ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில்பிரதிஷ்டைசெய்யப் பட்டிருந்த விக்கிரகம் இனந்தெரியாதோரால் உடைத்தெறிக்கபட்டது.

இவ் விடயம் பாராளுமன்றம் வரை பெரும் பேசுபொருளாக மாறியிருந்தது. அப்போது ஜனாதிபதி வெடுக்குநாறிமலைவிவகாரத்திற்கு நிரந்தரத் தீர்வு வழங்குவதாக உறுதியளித்திருந்தார்.

இருப்பினும் அதன் பின்னர் கடந்த சில தினங்களுக்கு முன்பாக ஆலயத்தில் இடம்பெற்ற சிவராத்திரி பூஜை நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்ற பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பொலிஸாரால் அநாகரிகமாக நடத்தப்பட்டிருந்தனர். எந்தவித குற்றமும் செய்யாத பக்தர்கள் கைதுசெய்யப்பட்டுதடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனூடாக வெடுக்குநாறி மலையில் பரம்பரை பரம்பரையாக வழிபட்டு வந்த மக்களுடைய வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டுள்ளது. வழிபாட்டு உரிமையை தடுக்கின்ற உரிமை பொலிஸாருக்கு இல்லை என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

எனவே, இவ்விடயம்தொடர்பாக ஏற்கனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கஉறுதியளித்ததன்படி, நிரந்தர தீர்வொன்றை வழங்க வேண்டும். அதனூடாக எமது மக்களுடைய மத நம்பிக்கை தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றுள்ளது.

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றிணைந்துஜனாதிபதிபதவியை மீண்டும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்சகவுக்கு வழங்கி நாட்டை எதிர்காலம் மிக்கதாக உருவாக்குதற்கான தீர்மானம் எடுக்கும் காலம் வந்துவிட்டது'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## வெடுக்குநாறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெடுக்குநாறி மலைப்பகுதி சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்குகள் உள்ளன.

அதேநேரம், குறித்த பகுதி வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிர்வாகத்துக்கு உட்பட்டது. அதேபோன்று, தொல்பொருள் இடமாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் குறித்த ஆலயத்தின் பூசகரும் மற்றொருவரும் அங்கு இரவு நேர பூசைகளை மேற்கொள்வதற்கான ஆயத்தங்களை செய்தபோது அவர்கள் கைது செய்யப்பட்டனர். பின்னர் பிணையில் விடுவிக்கப் பட்டனர்.

அதேநேரம், பூசைவழிபாடுகளுக்கான அனுமதியைக் கோரி நகர்த்தல் பத்திரமொன்று முன்வைக்கப்பட்டபோது அதற்கு பகல் வேளைகளில் பூசை நடத்துவதற்கே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த அனுமதியையும் மீறி இரவில் தீ மூட்டி பூசை வழிபாடுகள் மேற்கொள்வதற்கான முயற்சிகள் நடைபெற்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் வனப்பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் வடமாகாண பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு அறிவித்துள்ளார்.

குறிப்பாக, தற்போதைய வறட்சியான சூழலில் வனத்துக்குள் தீ மூட்டி பூஜை வழிபாடுகளை மேற்கொண்டால் அது ஆபத்தானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஆகவேதான் அச்செயற்பாடுகளை தடுப்பதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர் என்றார்.

## ஆசிரியர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், கடந்த மகா சிவராத்திரி தினத்தன்று இரவு வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் தலத்திலே வழிபாட்டிலே ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயக்குருக்கள், பொதுமக்கள், அரசியல் தலைவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட அத்துமீறல்களினையும், அவர்கள் அங்கு இருந்தோரிலே பலரினைக் கைது செய்தமையினையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மகா சிவராத்திரி சைவ, இந்து மக்களுக்கு மிகவும் முக்கியமான தினங்களிலே ஒன்று. அந்தத் தினத்திலே உலகெங்கும் வாழும் சைவ, இந்துமக்கள் ஆலயங்களிலே இரவு முழுவதும் விழித்திருந்து சமய அனுட்டானங்களிலே ஈடுபடுவர். அவ்வாறான ஒரு வேளையிலே பொலிஸார் ஆதி லிங்கேஸ்வரர் தலத்தினுள் நுழைந்து அது தொல்பொருள் ஆய்வுக்குரிய பாதுகாக்கப்பட்ட இடம் என்ற போர்வையிலே அங்கு அனுட்டானங்களிலே ஈடுபட்டிருந்த மக்களிற்கு பல இடையூறுகளை ஏற்படுத்தி இருக்கின்றனர்.

அவர்களுக்குத் தேவையான குடிநீர் கிடைப்பதனைத் தடுத்து நிறுத்தி இருக்கின்றனர். பின்னர் பூசைகளினைக் குழப்பி உள்ளனர். வழிபாட்டில் ஈடுபட்டோரினை பலவந்தமாக வெளியேற்றியும் கைது செய்துமுள்ளனர். இவை யாவும் அந்த மக்களின் சமய ரீதியிலான உரிமைகளை மோசமாக மீறும் செயல்களாகும் என்பதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டுகிறது.

வெடுக்குநாறி மலையில் இடம்பெற்றிருக்கும் இந்தச் சம்பவம் வெறும் வன்முறையும், அத்துமீறலும் மாத்திரம் அல்ல இது இலங்கையில் தொடரும் சிங்கள பௌத்த மேலாண்மைவாதக் கருத்தியலின் ஆகப் பிந்திய வன்முறை வடிவங்களிலே ஒன்று. சிறுபான்மையாக இருக்கும் மக்களின் மத உரிமைகளை பாதிக்கும் செயன்முறைகளினை இலங்கையினை ஆட்சிசெய்பவர்கள் காலங்காலமாக மேற்கொண்டு வந்திருக்கின்றனர்.

இந்த செயன்முறைகளினால் இந்து சமயத்தவர் மாத்திரமல்லாது, கிறீஸ்தவர்கள், இஸ்லாமியர்களும் பாதிக்கப்பட்டு வந்திருக்கின்றனர். பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசியல் யாப்பினைக் கொண்டிருக்கும் ஒரு நாட்டில், சிறுபான்மை மக்களின் மத உரிமைகளை மீறும் போக்குக்கள் யாப்பின் கருத்தியலுக்குள்ளேயே பொதிந்து போய் இருக்கிறது என்பதனை நாம் இங்கு சுட்டிக்கட்டுவது அவசியம். வெடுக்குநாறி மலைச்சம்பவம் இலங்கை அரசின் மதவாதக்குணாம்சத்தினால் ஏற்பட்ட ஒரு கட்டமைப்பு சார் விடயமாகவே பார்க்கப்படல் வேண்டும்.

தமிழ்பேசும் மக்கள் சமூகங்கள் பெரும்பான்மையாக வாழும் இலங்கையின் வடக்குக்கிழக்கினைப் பௌத்த மயமாக்கம் செய்வதன் மூலமும், சிங்கள மயமாக்குவதன் மூலமும் இந்தப் பிராந்தியத்தில் வாழும் தமிழ், முஸ்லிம் சமூகங்களை அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் வலுவிழக்கச் செய்யும்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர்
Kalaikkathir

# மாவடிப்பள்ளி அல்- மதீனாவின் 27 ஆண்டு நிறைவு நிகழ்வுகள்





மாவடிப்பள்ளி அல்- மதீனா பாலர் பாடசாலையின் 27 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், மாணவர்கள் விடுகை மற்றும் கௌரவிப்பு நிகழ்வும் பாடசாலையின் பணிப்பாளரும், மாவடிப்பள்ளி அனைத்து பாலர் பாடசாலை சம்மேளன தலைவருமான எம்.எச்.எம். அஸ்வர் அவர்களின் தலைமையில் மாவடிப்பள்ளி அல்- அஸ்ரப் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் மயோன் குஷரூப் நிறுவனத்தின் பணிப்பாளரும், ரிஸ்லி முஸ்தபா கல்வி மையத்தின் தலைவருமான ரிஸ்லி முஸ்தபா பிரதம அதிதியாக கலந்து கொண்டு பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர்களின் வகிபாகம், எதிர்காலத்தில் பிள்ளைகளை சிறந்த தலைவர்களாக உருவாக்க பெற்றோர்கள் செய்ய வேண்டிய பணிகள், எதிர்காலம் மீது உள்ள சவால்கள் தொடர்பில் கருத்துரைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு பணிப்பாளர் சபை உறுப்பினரும், மாவடிப்பள்ளி அனைத்து பாலர் பாடசாலை சம்மேளன தவிசாளருமான யூ.எல்.என். ஹுதா உமர் கலந்து கொண்டார். மாவடிப்பள்ளி ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசல் பிரதம நம்பிக்கையாளர் ஏ.எல்.எம். மனாப், அட்டாளைச்சேனை பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி பீ .எம். றியாத், டலண்ட் பிளஸ் நிறுவனர் அல்ஹாபிழ் ஆர்.எம். சில்ஹான் உட்பட அதிதிகள், பெற்றோர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் கடந்த காலங்களில் இப்பாலர் பாடசாலையில் கல்வி கற்று பல்கலைக்கழகம் சென்ற மாணவர்கள், சாதாரண தரத்தில் அதி திறமை சித்தி பெற்ற மாணவர்கள், தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி அதிதிகளால் மாணவர்களுக்கு சான்றிதழ், நினைவு சின்னங்கள், பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (05)

# கடையாமோட்டை தேசிய பாடசாலையில் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு





(எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் - தெற்கு கோட்டத்துக்குப்பட்ட கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) யில் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலையின் தரம் 6,7 பகுதித் தலைவர் எம்.எம். பைஸல் ஆசிரியரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.எச். எம். தௌபீக்கின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விசேட அதிதிகளாக பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரும், முந்தல் - மதுரங்குளி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவருமான ஏ.எச்.எம். ஹாஷரூன், கல்வி அபிவிருத்திக் குழு செயலாளர் சீ.எம்.எம். தாவூத், பழை மாணவர் சங்க செயலாளர் ஜே.எம். ஜெஸீர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

தரம் - 6 புதிய மாணவர்களை தரம் - 7 மாணவர்கள் பூச்செண்டு மற்றும் இனிப்புப் பண்டங்கள் வழங்கி வரவேற்றனர்.

இதன்போது பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் லியோ கழகம் தொடக்கிவைப்பு





சுன்னாகம் லயன்ஸ் கழகத்துக்கு ஆளுநரின் உத்தியோக வருகை அண்மையில் கந்தரோடையில் சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செ.விஜயராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மாவட்டம் 306 பீ1 இன் ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம் பீற்றர் - லயன் சாவித்திரி பீற்றர் தம்பதிகள் பிரதம விருந்தினர்களாகவும் லயன் தேவா டி பீற்றர் - லயன் ஜெசிந்தா தம்பதிகள் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

மேற்படி நிகழ்வில் சுன்னாகம் லியோ கழகத்துக்கான புதிய நிர்வாகம் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட லயன் தேவா டி பீற்றரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சுன்னாகம் லியோ கழகத்துக்கு புதிய தலைவராக லியோ மரியதாஸ் சனோஜனும் செயலாளராக லியோ டினேஸ் மதுமிதாவும் லியோ சபீசன் பொருளாளராகவும் மற்றும் ஏழு பேர் கொண்ட நிர்வாகிகள் குழுவும் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. (05)

# வெடுக்குநாறி ஆலயத்தில் கைதானோருக்கு வைத்தியசாலையில் மருத்துவ சோதனைகள்



வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலய சிவ ராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 8 பேரும் சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அழைத்துச் செல்லப்பட்டனர்.

சிவராத்திரி தினத்தன்று கைதுசெய்யப்பட்டவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாகவும், கைது செய்யப்பட்டர்களிடம் காயங்கள் காணப்படுவதாகவும் கைது செய்யப்பட்ட 8 பேர் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணிகள் சனிக்கிழமை நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்து, குறித்த 8 பேரையும் சட்ட வைத்திய அதிகாரியிடம் கொண்டு சென்று முன்னிலைப்படுத்துமாறு மன்று உத்தரவிட்டிருந்தது. அதற்கமைவாக நேற்று(ஞாயிற்றுக்கிழமை) சட்ட வைத்திய அதிகாரிடம் அழைத்து செல்லப்பட்டனர்.

நேற்று விடுமுறை தினம் என்பதால் சிறைக்கைதிகளை பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் இல்லை. இதனால் வைத்தியசாலையில் வைத்து அவர்களுக்கான மாற்று ஆடைகள் வழங்குவதற்கு கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்களால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் சிறைக்காவலர்கள் அதற்கு அனுமதி வழங்கியிருக்கவில்லை. இதனால் கடந்த இரு தினங்களாக அவர்கள் கைது செய்யப்படும் போது அணிந்திருந்த ஆடைகளே அணிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05-100)

# சுவனச்சோலை போட்டியில் வெற்றிபெற்றோர் கௌரவிப்பு

(தில்சாத் பர்வீஸ்)



ஆர்.ஜே.மீடியா கலை, கலாசார ஊடக வலையமைப்பு மற்றும் சீகாஸ் உயர்கல்வி நிறுவனமும் இணைந்து இவ்வருடம் நடத்திய ரமழான் சுவனச்சோலை வினா விடை ,கிராத் ,அரபு எழுத்தாணி போன்ற போட்டி நிகழ்ச்சிகளில் நாடளாவிய ரீதியில் கலந்துகொண்ட நூற்றுக்கணக்கான போட்டியாளர்களில் முதல் இடங்களைப் பெற்ற போட்டியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்துடன் இணைந்ததாக கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

இதன் போது தேசிய ரீதியில் முதலிடங்களை பெற்ற வெற்றியாளர்களுக்கு மிகப் பெறுமதியான சான்றிதழ்கள் மற்றும்

நினைவுச் சின்னங்கள் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் தவிசாளர் கலாநிதி செயினுலாப்தீன் நஜ்முத்தீன், ஆர்.ஜே.மீடியா கலை, கலாசார ஊடக வலையமைப்பின் பணிப்பாளர் சமூகப்பணி இளம் கலைமாணி மாணவர் அறிவிப்பாளர் ஏ.எம். இன்ஷாப், சீகாஸ் உயர்கல்வி நிறுவனத்தின் பதிவாளர் நாயகமும் செயலாளருமான நூருல் நப்கா இல்யாஸ் பிரதம அதிதிகளாக இலங்கையிலுள்ள மலேசிய உயர்ஸ்தானிகராலயத்தின் ஆலோசகர் மொஹமட் துமிங் மற்றும் இலங்கையிலுள்ள மாலைதீவு உயர்ஸ்தானிகராலயத்தின் ஆலோசகர் கலாநிதி ஆரிப் றிசா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பெண்கள் மீது அக்கறை காட்டுங்கள்

இந்த ஆண்டு வைச மக்களின் சிவராத்திரி நிகழ்வன்றே சர்வதேச மகளிர் தினமும் வந்ததால் அந்த நாளில் அது கவனம் இழந்துவிட்டது. அதன் பின்னர் சனி, ஞாயிறு தினங்களில் மகளிர் நாளையொட்டிய பல்வேறு நிகழ்வுகளும் தமிழர்கள் பகுதிகளில் ஆங்காங்கே நடைபெற்றன. தெற்கில் பங்குனி 8 அன்றே மகளிர் நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன என்றாலும் அவையும் பெண்களின் உண்மையான பிரச்சினைகளின் மீது கவனம் செலுத்தியதா என்பது கேள்விக்குறிதான்.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட பின்னர் அதனால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் பெண்கள்தான். குறிப்பாக, வறுமையில் வாடும் ஒவ்வொரு குடும்பங்களிலும் தமது உணவை முதலில் குறைப்பவர்களாகப் பெண்களே, தாய்மாரே இருக்கிறார்கள். இந்த நாட்டன் பாரம்பரியத்தின் அடிப்படையில் பெண் விட்டுக்கொடுப்புக்கும் அர்ப்பணிப்புக்கும் உரியவராக இருந்தேயாகவேண்டும் என்பதால் பொருளாதார நெருக்கடியின் உச்சத் தாக்கத்தையும் அவரே சுமக்கவேண்டியவராக இருக்கின்றார்.

அதன் மற்றொரு வடிவமாக பெண்கள் அவர்களது அடிப்படைச் சுகாதாரத்திலும் பாதிப்புக்களை எதிர்கொண்டிருக்கின்றார்கள் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சட்டத்தரணிகள் அமைப்பின் அண்மைய அறிக்கை ஒன்று பெண்களின் இந்த அவல நிலையை வெளிப்படுத்தியுள்ளது. பொருளாதார நெருக்கடியால், 15 வயதுக்கும் 47 வயதுக்கும் இடைப்பட்ட 40 சதவீதமான பெண்கள் தமது மாதாந்தத் தேவைக்கான 'சனிட்டரி நாப்கின்'களின் உபயோகத்தை நிறுத்திவிட்டார்கள் என்கிறது அந்த அறிக்கை.

2019 ஆம் ஆண்டில் மக்கள் தொகை மற்றும் புள்ளிவிவரவியல் துறையால் வெளியிடப்பட்ட குடும்ப வருமானம் குறித்த அறிக்கையின் தரவுகளின் அடிப்படையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இது குறித்து கருத்து தெரிவித்துள்ள கணக்கெடுப்பை நடத்திய நிறுவனம், 2022 அக்டோபரில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சானிட்டரி நாப்கின்களுக்கான அனைத்து இறக்குமதி மூலப்பொருள் வரிகளும் நீக்கப்பட்டாலும், 2023 வற் வரி திருத்தத்தில் சானிட்டரி மூலப்பொருட்களுக்கு மீண்டும் 18% வரி விதிக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது.

2019 ஆம் ஆண்டில், 15 முதல் 47 வயதுக்குட்பட்ட 21 லட்சம் பெண்கள் மற்றும் சிறுமிகள் நிதிச் சிக்கல்களால் 'சானிட்டரி நாப்கின்'களை பயன்படுத்தவில்லை என்று சட்டத்தரணிகள் அமைப்பைச் சேர்ந்தவரான அத்வகாதா கூறினார். வாழ்க்கைச் செலவு அதிகரிப்புடன் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என இது தொடர்பான கணக்கெடுப்பில் தெரியவந்திருப்பது அதிரிச்சியூட்டுகின்றது.

ஒரு பெண்ணுக்கு சுமார் ஒரு மாதவிடாய் சுழற்சிக்கு ரூபாய் 375 படி ஆண்டுக்கு ரூ.4500 அதிக செலவாகும். தற்போது இறக்குமதி செய்யப்படும் 'சானிட்டரி நாப்கின்'களுக்கு 51.07% வரி விதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருடாந்த வருமானம் சுமார் 37 மில்லியன் ரூபாய். இது மொத்த வரி வருவாயில் 0.0021% சதவீதம் மட்டுமே. இது ஒரு குறிப்பிடத்தக்க வரி வருவாய் சுகாதாரத்தில், உயிரியல் சுழற்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்கிறது சட்டத்தரணிகள் அமைப்பு.

நாட்டின் பொருளாதாரத்தைச் சிதைத்து பெண்களை இந்த அவலத்திற்குள் தள்ளியவர்களும் அவர்களின் குடும்பப் பெண்களும் நிச்சயமாக இத்தகைய பரிதாப நிலையை எதிர்கொள்ளமாட்டார்கள். அவர்களைப் பாதுகாத்து தொடர்ந்தும் பெண்களை அவலத்திற்குள் தவிக்க விட்டிருக்கும் இன்றைய ஆட்சியாளர்களும் அவர்களின் குடும்பங்களும்கூட இத்தகைய நெருக்கடியை நிச்சயம் எதிர்கொள்ளப்போவதில்லை. ஆனால், பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களும் நிச்சயம் இந்த மோசமான பொருளாதாரச் சுமையைச் சுமக்க வேண்டியவர்களாகவே இருப்பார்கள். இருக்கிறார்கள்.

அதுபற்றி அக்கறைகொள்வதற்கோ பெண்களின் சுகாதாரத் தேவை குறித்து கவனம் செலுத்துவதற்கோ இன்றைய ஆட்சியாளர்களுக்கும் பெண்கள் நல அமைப்புக்களுக்கும் நேரமும் தேவையும் இல்லை. ஒரு காலத்தில் ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்காக 'நாப்கின்'களை இலவசமாகத் தருவோம் என்று பரப்புரை செய்யப்பட்ட நாட்டில் இன்று 40 வீதமான பெண்கள் அவற்றை உபயோகிக்க முடியாத அவலத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பது குறித்து அக்கறைப்படுவதற்கும் அவர்களுக்கு உதவுவதற்கும் இன்று எவரும் இல்லை.

இந்த விடயம் குறித்து ஆட்சியாளர்கள் உடனடியாக அக்கறை செலுத்தவேண்டும். பெண்களின் அடிப்படைச் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட இந்த விடயத்தில் உடனடியாக வரிகளைக் குறைத்து 'நாப்கின்'களின் விலைகள் குறைய நடவடிக்கை எடுப்பதுடன் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த சிறுமிகள், பெண்களுக்கு 'நாப்கின்'கள் தடையின்றிக் கிடைப்பதற்கான வழி வகைகளையும் உருவாக்கவேண்டும். அஸ்வெசும நலன்புரித் திட்டம் போன்றவற்றை ஆளும் தரப்பு முன்னெடுக்கின்றதுதானே என்று வெற்றுக் கதைகளை முன்வைப்பதை நிறுத்திவிட்டு இது விடயத்தில் உடனடிய உதவிகளை வழங்குவதற்கு ஆளும் தரப்பினர் அதிலும் குறிப்பாக ஆளும் தரப்பிலுள்ள பெண் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் அக்கறை செலுத்தவேண்டும்.




# ரஷ்யா தோல்வியில் பிரான்ஸ் உறுதி தரைப்படையை அனுப்புவாரா மேக்ரான்?

- ஐங்கரன் விக்கினேஸ்வரா




உக்ரேனிய போரில், ரஷ்யா தோற்றே ஆகவேண்டும் என பிரான்ஸ் ஜனாதிபதி மேக்ரான் அண்மையில் சூளுரைத்துள்ளார். 2022 பெப்ரவரி 24 அன்று தொடங்கிய ரஷ்ய-உக்ரைன் போர் இன்னமும் தொடர்கிறது.

**ரஷ்யா தோல்வியபைய உறுதி:**

இரு வருடங்களைக் கடந்து தீவிரமடைந்துள்ள நிலையில், உக்ரைனுக்கு உதவி வந்த அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் நிதியுதவி உக்ரைனுக்கு தொடர்ந்து கிடைப்பதில் பல்வேறு காரணங்களால் சிக்கல் நிலவுகிறது.

உக்ரைனிடம் போதுமான அளவு இராணுவ தளவாடங்கள் இல்லாததால், தங்கள் நாட்டில் ரஷ்ய இராணுவம் முன்னேறி, பிராந்தியங்களை கைப்பற்றுவதைத் தடுப்பது கடினமாக உள்ளது என உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்து உலக நாடுகளிடம் உதவி கேட்டு வருகிறார்.



மேற்கத்திய நாடுகளின் இராணுவ உதவிகள் கிடைப்பது தாமதமாவதால், உயிரிழப்புடன் உக்ரைனின் பல பிராந்தியங்களை ரஷ்யாவிடம் இழக்க நேரிடும் என உக்ரைன் இராணுவ அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிலையில், உக்ரைனுக்கு ஆதரவான நாடுகளின் சந்திப்பு, பெப்ரவரியில் பிரான்ஸ் தலைநகர் பாரிஸஸில் நடைபெற்றது.

இதில் பேசிய பிரான்ஸ் ஜனாதிபதி எம்மானுவல் மேக்ரான் ரஷ்யா தோல்வியடைய பிரான்ஸ் திடசங்கற்பம் பூண்டுள்ளது என

தெரிவித்ததார். இப்போரில் ரஷ்யா வெற்றி பெறக் கூடாது. ஐரோப்பிய நாடுகள் பாதுகாப்புடன் நிலையாக இருக்க ரஷ்யா இப்போரில் தோற்க வேண்டியது அவசியம்.

**நேட்டோ படையை அனுப்ப எதிர்ப்பு:**

ஆயினும் மேக்ரானின் தரைப்படை அனுப்பும் திட்டத்தை மற்றய நேட்டோ நாடுகள் ஆதரிப்பதாகத் தெரியவில்லை. மேற்கத்திய நாடுகள் நேரடியாக போரில் தலையிடுவதன் மூலம் சிவப்புக் கோட்டைத் தாண்டக்கூடாது என்று ஜேர்மன் பாதுகாப்புத்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

மேக்ரானின் கருத்துக்கள் பயனளிப்பவையாக இல்லை என்றும், உக்ரைனுக்கு வீரர்களை அனுப்புவது தைரியமா அல்லது கோழைத்தனமா என்பதைக் குறித்து விவாதிக்க அவசியமில்லை என தான் கருதுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், மேற்கத்திய நாடுகளின் வீரர்கள் உக்ரைனுக்கு ஆதரவாக போரிடுவதற்காக உக்ரைன் சென்றால், அவர்கள் அணு ஆயுதப் போரை எதிர்கொள்ளவேண்டியிருக்கும் என ரஷ்ய ஜனாதிபதி புட்டின் எச்சரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**ரஷ்ய மக்களுடன் போர் அல்ல:**

ரஷ்யா வெற்றி பெறாமலிருக்க நாங்கள் அனைத்தையும் செய்வோம்.

ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு மனப்பான்மையுடன்தான் நாங்கள் போரிடுகிறோமே தவிர ரஷ்ய மக்களுடன் அல்ல.

குறுகிய தூர மற்றும் தொலைதூர ஏவுகணைகளும், வெடிகுண்டுகளும் உக்ரைனுக்கு விரைவில் வழங்கப்படும்.

உக்ரைனுக்கு நட்பு நாடுகளின் இராணுவத்தை அனுப்ப வேண்டிய சூழல் வந்தால் அதையும் பரிசீலனை செய்வோம். இவ்வாறு மேக்ரான் கூறினார்.

சில தினங்களுக்கு முன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், நேரடியாக மேற்கத்திய நாடுகளின் இராணுவம் உக்ரைன் மண்ணில் இருந்து போரிட தொடங்கினால் அது ரஷ்யாவிற்கும் நேட்டோ (யேுவுழு) கூட்டணி நாடுகளுக்கும் எதிரான போராக மாறும் என எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**கோழைகளாக இருக்க வேண்டாம்!**

ரஷ்யா உக்ரைன் போர் தொடர்பில் பிரான்ஸ் ஜனாதிபதி அண்மையில் நேட்டோ நாடுகளை கோழைகளாக இருக்கவேண்டாம் என வலியுறுத்தி உள்ளார்.

உக்ரைனின் நட்பு நாடுகள் போரில் உக்ரனுக்கு உதவவேண்டுமென அழைப்பு விடுத்த மேக்ரான், மேற்கத்திய நாடுகளின் வீரர்கள் உக்ரைனுக்கு (5ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதித் தேர்தலில் இந்துக்கள் தக்க பாடத்தைப் புகட்டுவார்கள்

## வெடுக்குநாறி ஆலய விவகாரம் குறித்து சிவசக்தி ஆனந்தன் கருத்து



வெடுக்குநாறி ஆலய விவகாரம் தொடர்பாக ஜனாதிபதித் தேர்தலில் இந்துக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க அவர்களுக்கு ஒரு பாடத்தை படிப்பிப்பார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈபிஆர்எல்எப் கட்சியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் மகாசிவாரத்திரியை முன்னிட்டு பக்தர்கள் பூஜை வழிபாடுகளுக்கு சென்ற நிலையில் அந்த பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் வருகை தந்து ஆலயத்தின் மகாசிவராத்திரி விழாவுக்கு இடையூறாக செயற்பட்டதுடன், கீழ்தரமாக பொலிஸார் நடந்து கொண்ட நடவடிக்கை உலக வாழ் இந்துக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், அதிர்வலைகளையும் ஏற்படுத்தியுள்ளது.


குறிப்பாக அந்த ஆலயத்தில் தொல்பொருளுக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் வழமையான பூஜை வழிபாடுகளை செய்யலாம் என உத்தரவிட்ட போதும் அந்த வழிபாட்டுக்கு பொலிஸார் இடையூறை ஏற்படுத்தி இரவு மோசமாக நடந்துள்ளார்கள்.

அங்கு இருந்த பூசகர் உள்ளிட்ட பலரை கைது செய்துள்ளனர். கைது செய்ததுடன் அவர்களுடைய ஆடைகளைக் கூட களைந்திருக்கிறார்கள். வழிபாடடுக்குரிய பொருள்களை அசிங்கப்படுத்தியுள்ளார்கள். தண்ணீர் கொண்டு செல்ல அனுமதிக்கவில்லை. இது முழுக்க முழுக்க இலங்கை அரசாங்கத்தால் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்படும் செய்பாடு. தொடர்ச்சியாக அந்த ஆலயத்தில் பொலிஸார் இடையூறை ஏற்படுத்தி வருகிறார்கள். பௌத்த துறவி ஒருவர் அந்த இடத்திற்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களை அழைத்து செல்ல வேண்டும் என்று கூறியதன் அடிப்படையில் தான் இந்தத் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே தொடர்ச்சியாக அந்த ஆலய வழிபாட்டுக்கு அரசாங்கம், அமைச்சர்கள், ஜனாதிபதி இடையூறுகளை செய்து கொண்டு இருக்கின்றமை கண்டிக்கத்தக்கது. அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட மோசமாக நடத்தப்பட்டுள்ளார்கள். வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பாக ஆளுக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீங்கள் அரசாங்கத்துடன் இணைந்து இருந்து அபிவிருத்தி செய்கின்றோம் என்ற பெயரில் எந்தவித அபிவிருத்தியும் செய்யாது அரசாங்கத்தினதும், பொலிஸாரினதும் இந்த கெடுபிடிகளுக்கு நீங்கள் மௌனம் சாதித்துக் கொண்டு இருப்பதானது உங்களுக்கு வாக்களித்த வன்னி மக்களுக்கு செய்கின்ற பெரியதொரு துரோகமாக தான் நாங்கள் பார்க்கின்றோம்.

ஆகவே அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியோடு பேசி இந்த ஆலயத்தின் வழிபாட்டுக்கு பொலிஸார் தொடர்சியாக மேற்கொள்கின்ற இடையூறுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். அது எதிர்கால உங்கள் அரசியல் பயணத்திற்கும் உதவும்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் குறிப்பாக ரணில் விக்கிரமசிங்க ஒரு பக்கம் நல்லிணக்கத்தைப் பேசிக் கொண்டு இப்படியான கெடுபிடிகளை செய்வதன் மூலம் தமிழ் மக்களிடம் இருந்து குறிப்பாக இந்து கிறிஸதவ மக்களிடம் இருந்து வாக்குகளை பெறுவது என்பது கடினமானதாகவே இருக்கும். ஜனாதிபதித் தேர்தலில் இந்துக்கள் அவருக்கான ஒரு பாடத்தை படிப்பிப்பார்கள் எனத் தெரிவித்தார். (05-100)

# ரஷ்யா தோல்வியல்........



ஆதரவாக போரிடுவதற்காக உக்ரைன் செல்வதற்கு தனது ஆதரவையும் உறுதி செய்துள்ளார். மேலும் ஐரோப்பாவில் முடக்கப்பட்டுள்ள ரஷ்யர்களின் சொத்துக்களைக் கொண்டு உக்ரைனுக்கு உதவுவதற்கும் தான் ஆதரவு தெரிவிப்பதாகவும் மேக்ரான் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மண்ணில் ரஷ்யா தோல்வியடைய வேண்டும் எனவும், ஆனால் ரஷ்யாவை சின்னாபின்னமாக்கும் வெற்றி வேண்டாம் எனவும், உக்ரைன் தனது நிலையைப் பாதுகாக்கவும் வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என மேக்ரான் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் ரஷ்யாவை மொத்தமாக சின்னா பின்னமாக்கிவிட்டு வெற்றி கொள்ளும் திட்டத்திற்கு பிரான்ஸ் ஆதரவளிக்காது எனவும் மேக்ரான் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவை அதன் மண்ணில் வெற்றிகொள்ள வேண்டும் என சில நாடுகள் குறிப்பிடுவதை தாம் ஏற்கவில்லை எனவும் மேக்ரான் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா உக்ரைன் போர் தொடர்பில் பேசிய பிரான்ஸ் ஜனாதிபதி, உக்ரைனின் கூட்டாளிகள் கோழைகளாக இருக்கக்கூடாது என்று கூறியுள்ளார். மேக்ரானின் இந்த கருத்துக்கு சில நேட்டோ உறுப்பு நாடுகள் கடும் விமர்சனம் வைத்துள்ளன.

**முனிச் பாதுகாப்பு மாநாடு:**

முனிச்சில் முன்னெடுக்கப்பட்ட மூன்று நாட்கள் பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்ட பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் மற்றும் அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் ஆகியோரும் உக்ரைனுக்கு ஆதரவாக தங்கள் நிலைப்பாட்டை குறிப்பிட்டுள்ளனர்.

மாநாட்டில் பங்கேற்ற நாடுகள் பல உக்ரைனுக்கு மேலும் அதிகமாக ஆயுதங்களை வழங்க உறுதி செய்ததுடன், ரஷ்யாவுக்கு எதிராக கடுமையான பொருளாதார தடைகளை கொண்டுவரவும் கோரிக்கை வைத்தனர்.





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rorry With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# சுற்றுலாத்துறை வளர சைவத் தமிழரின் வழிபாட்டுரிமையை அங்கீகரியுங்கள்

## இடித்துரைக்கிறார் சுரேஷ் க.பிரேமச்சந்திரன்

வெடுக்குநாரிமலையில் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்களைக் கைது செய்திருப்பதுடன், கோயிலுக்குள் சப்பாத்துக் கால்களுடன் சென்று அங்கு வழிபாட்டில் ஈடுபட்டிருந்த சிவ பக்தர்களின் உணர்வுகளை அவமதித்திருக்கும் பொலிஸாரின் செயற்பாடுகளைக் கண்டித்தும் அங்கு பௌத்த பிக்குகளின் தலைமையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல் நடவடிக்கைகளையும் கண்டித்து ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் உத்தியோகபூர்வ பேச்சாளரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் க. பிரேமச்சந்திரன் ஊடக அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையின் முழுவிவரம் வருமாறு -

இலங்கையின் அரசியல் சாசனத்தின் பிரகாரம் இலங்கை குடிமக்கள் தாம் விரும்பிய மதத்தை பின்பற்றவும் வழிபடவும் அவர்களுக்கு முழுமையான உரித்துண்டு.

ஆனால் அதேசமயம் இலங்கையில் பௌத்தத்திற்கு முதலிடம் என்றும் கூறப்படுகின்றது. அதன் காரணமாக பௌத்த பிக்குகளும் இராணுவத்தினரும் பொலிஸாரும் ஒன்றிணைந்து ஏனைய மதத்தலங்களை அழித்தொழிப்பதும் அந்த இடங்களில் புத்த விகாரையைக் கட்டுவதுமான செயற்பாடுகளில் கடந்த பல தசாப்தங்களாக ஈடுபட்டு வருகின்றனர்.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் வடக்கின் சகல மாவட்டங்களிலும் அதனைப் போன்றே திருகோணமலையிலும் கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் சிங்கள மக்களோ பௌத்த மக்களோ வாழாத பிரதேசங்களில் ஏனைய மதத்தலங்கள் இருந்த புராதான இடங்களில் புத்த விகாரைகளை நிறுவுகின்ற பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசாங்கத்தின் பூரணமான அனுசரணையுடனும் நிதிப்பங்களிப்புடனும் இந்த விடயங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

கடந்த 8ஆம் திகதி சிவராத்திரியின பொழுது வவுனியா மாவட்டத்தின் வெடுக்குநாரி மலையில் பல்லாண்டுகாலமாக வீற்றிருக்கும் ஆதிசிவன் கோயிலில் சிவன்ராத்திரியைக் கொண்டாடுவதற்காக கூடியிருந்த சிவபக்தர்களை புத்த பிக்குகளும் பொலிஸாரும் அதிரடிப்படையினரும் அடாவடித்தனங்களில் ஈடுபட்டு அச்சுறுத்தியுள்ளதுடன் பலரைக் கைது செய்துமுள்ளனர்.

இரவு முழுவதும் கண்விழித்து சிவனை வழிபட்டு அவர் அருளைப் பெறுவதற்கான சைவ மக்களின் வழிபாட்டு முறையே சிவராத்திரியாகும். வெடுக்குநாரி மலையில் மக்கள் வழிபடுவதற்கு வவுனியா நீதிமன்றமும் ஆணைவழங்கியிருக்கக்கூடிய நிலையில், இரவு வழிபாடுகளில் ஈடுபடக்கூடாது என்று சொல்வதற்கும் அங்கு சென்ற அடியார்களை அடித்துத் துன்புறுத்துவதற்கும் பொலிஸாருக்கு எந்தவித அதிகாரமோ உரிமையோ கிடையாது. நீதிமன்றத்தின் வழிகாட்டுதலுக்கு இணங்க அதன்பிரகாரமே அங்கு சகல வழிபாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆகவே அங்கு சட்டம் ஒழுங்கு சீர்கெடுவதற்கான எத்தகைய முயற்சிகளும் இடம்பெறவில்லை. ஆனால் வடக்கு கிழக்கின் பல பகுதிகளில் முக்கியமாக கன்னியா வெந்நீஷரூற்று, குருந்தூர்மலை, வெடுக்குநாரிமலை உள்ளிட்ட மேலும் பல புராதான சைவ சமய பிரதேசங்களில் புத்த பிக்குமார்களும் அவர்களுடன் இணைந்த குண்டர் கூட்டங்களும் சேர்ந்து தொடர்ச்சியாக பிரச்சினைகளை உருவாக்கிவருவது அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் வெளிப்படையாகத் தெரியும். ஆனால் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு எத்தகைய உருப்படியான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

மிக நீண்டகாலமாக இந்நாட்டில் இனவிடுதலைக்கான போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். பல்லாயிரம்கோடி பெறுமதியான சொத்துகள் அழிக்கப்பட்டன. நாடு வங்குரோத்து நிலைக்குச் செல்வதற்கும் அதுவே காரணமாகவும் அமைந்தது, இன்று மீண்டும் ஒரு மதப்பிரச்சினையின் ஊடாக இனமோதலுக்கான அத்திபாரம் இடப்படுகிறது.

தமிழ் மக்கள் மிகப்பெரும்பான்மையாக வாழ்கின்ற வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் தென்பகுதியிலிருந்து பௌத்த பிக்குகள் வருவதும் இது தங்களது பிரதேசங்கள் என்று உரிமை கோருவதும் அங்கு புத்த கோயில்களை கட்டுவதும் சிங்கள மக்களைக் குடியேற்றுவதும் என்பது யுத்தத்திற்குப் பின்னர் ஒரு தொடர்கதையாக நிகழ்கின்றது. இவை கட்டுப்படுத்தப்படாவிட்டால் இலங்கை தொடர்ந்தும் வங்குரோத்து அடைந்த நாடாகவே இருக்கும்.

தமிழ் மக்களைத் துன்புறுத்துவதும் அவர்களது மத கலாசார நடவடிக்கைகளை சீர்குலைப்பதும் இந்த நடவடிக்கைக்கு இராணுவத்தினரையும் பொலிஸாரையும் ஈடுபடுத்துவதும் வெறுக்கத்தக்க அநாகரிகமான செயலாகும். ஜனாதிபதியும் அரசாங்கமும் உதட்டளவில் இன நல்லிணக்கத்தைப் பற்றிப் பேசாமல் அதனைச் செயலளவில் காட்ட வேண்டிய தருணம் இது.

இலங்கைக்கு மிகப் பெருமளவிலான சுற்றுலாப் பிரயாணிகளாக இந்திய மக்களே வருகின்றனர். அவர்களில் மிகப்பெருமளவிலானோர் இந்துக்களாகவும் இருக்கின்றனர். அவர்களோடு மட்டுமல்லாமல் ஏனைய நாடுகளிலிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகளும் புராதானச் சின்னங்களைக் கண்டு தரிசிக்கவே விரும்புகின்றனர்.

ஆகவே அந்தப் புராதானச் சின்னங்கள் எல்லாவற்றையும் தகர்த்தெறிந்துவிட்டு, சுற்றுலாப் பிரயாணிகளே வாருங்கள் என்று கூவுவதில் அர்த்தமில்லை.

இலங்கையின் மிகப்பெருமளவிலான வருமானம் சுற்றுலாத்துறையையும் நம்பியிருக்கின்றது. ஆனால், அந்நியச் செலாவணியை ஈட்டித்தருகின்ற சுற்றுலாத்துறையையும் நிர்மூலமாக்கும் நடவடிக்கைகளிலேயே இன்றைய அரசாங்கம் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இது நாட்டை மேலும் வங்குரோத்து நிலைக்கு இட்டுச் செல்வதுடன் இலங்கையின் மதிப்பை சர்வதேச மட்டத்தில் குறைப்பதற்கு உதவுமே தவிர, நாட்டை சுபீட்சத்தை நோக்கி இட்டுச்செல்லாது என்பதை அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். - என்றுள்ளது. (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

## 2ஆம் லெப். ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான 2ஆம் லெப்டினண்ட் மாலதியின் உருவப்படத்துடன் இந்த மகளிர் நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன.

கட்சியின் கிளிநொச்சி மாவட்ட மாதர் முன்னணியின் தலைவி முராளினி தினேஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றின் சட்டவாளர்.விஜயராணி சதீஸ்குமார் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டிருந்ததோடு, தமிழரசுக் கட்சியின் பிரமுகர்களான நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஈஸ்வரபாதம் சரவணபவன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் மதினி நெல்சன், சசிகலா ரவிராஜ் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

முன்னாள் போராளியும் கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமான லலிதகுமாரி சத்தியமூர்த்தியின் அரசியல், சமூகப் பணிகளைப் பாராட்டி 'மண்ணின் மாதவம் -2024' என்னும் விருதும் நிகழ்வில் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது

## ஆசிரியர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயன்முறைகளிலே இலங்கை அரசாங்கங்கள் பல தசாப்தங்களாக ஈடுபட்டு வந்திருக்கின்றன.

இந்தச் செயன்முறைகளின் ஒரு வடிவமாகத் தொல்பொருளியல் ஆய்வு என்ற போர்வையில் வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் தலத்தினையும் ஏனைய பல சைவ, இந்து மக்கள் வழிபடும் தலங்களையும் சிங்கள பௌத்தமயமாக்கும் நடவடிக்கைகள் அண்மைய சில வருடங்களாகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.

கொழும்பில் இருந்து, மையப்படுத்தப்பட்ட முறையிலே, இராணுவக் கட்டமைப்புக்களின் துணையுடன், சிங்கள பௌத்தக் கருத்தியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இந்தத் தொல்பொருளியல் செயன்முறைகளின் போது வடக்குக் கிழக்கிலே பல சந்ததிகளாக இந்தத் தலங்களிலே தமது சமய அனுட்டானங்களில் ஈடுபடும் மக்களின் உரிமைகளுக்கும், கருத்துக்களுக்கும் எந்த விதமான இடமும் வழங்கப்படுவதில்லை.

மாறாக தொல்பொருளியல் ஆய்வு என்பது இந்த மக்களின் மீதும், அவர்களின் சமய நம்பிக்கைகள் மற்றும் செயன்முறைகளின் மீதும் ஒரு வன்முறையாகவே ஏவப்படுகிறது. இந்த வன்முறையின் ஒரு விளைவே கடந்த சிவராத்திரி தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்களும் கைதுகளும்.

கைதுசெய்யப்பட்ட அனைவரும் உடனடியாக வழக்குகள் எதுவுமின்றி விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், வடக்குக் கிழக்கிலே தொல்பொருளியல் ஆய்வு என்ற பெயரிலும், வனப் பாதுகாப்பு என்ற பெயரிலும், மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் என்ற பெயரிலும் ஏனைய வடிவங்களிலும் இடம்பெறும் சிங்கள பௌத்த மயமாக்கற் செயன்முறைகள் யாவும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் கோருகிறது.

இனவாதத்தினையும், மதவாத்தினையும் முன்னெடுக்கும் அரசியலமைப்பும், அரசுக் கட்டமைப்பும் மாற்றப்பட்டால் மாத்திரமே இலங்கையில் வாழும் மக்கள் அனைவரும் இன, சமய ரீதியிலே சமத்துவம் மிக்கவர்களாக வாழ முடியும். வெடுக்குநாறி மலைப் பிரச்சினைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் அனைவரும் இவ்வாறான அரசியல் மாற்றங்களினை வலியுறுத்துவதன் மூலமாக இனவாதத்தினையும், மதவாதத்தினையும் முறியடிக்க முன்வர வேண்டும் என ஆசிரியர்




காலைக்கதிர் Kalaikkathir

# தேர்தல் ஆணையகத்திடம் ஒக்ரோபர் 16இல் அதிகாரம்

## பவ்ரல் தேசிய இணைப்பாளர்

(வி.ரி.சகாதேவராஜா)

ஒக்டோபர் 16 ஆம் திகதி சகல தேர்தல் அதிகாரங்களும் தேர்தல் ஆணையகத்திடம் செல்கின்றன.அதன் பின்பு நாடாளுமன்றமோ அல்லது ஜனாதிபதியோ தேர்தலில் தலையிடும் அதிகாரம் இருக்காது.எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் ஜனாதிபதி தேர்தல் வைத்தே ஆக வேண்டும். எனவே மக்கள் விழிப்படைய வேண்டும்.

இவ்வாறு தூய்மையான அரசியலுக்கான மார்ச் 12 இயக்க அம்பாறை மாவட்ட கூட்டத்தில் உரையாற்றிய பவ்ரல் அமைப்பின் தேசிய இணைப்பாளர் என். சத்யராஜ் தெரிவித்தார்.

மார்ச் 12 இயக்க அம்பாறை மாவட்ட ஆரம்ப கூட்டம் மாவட்ட இணைப்பாளர் கந்தையா சத்தியநாதன் தலைமையில் சேனைக் குடியிருப்பு சேவோ தலைமையகத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

அங்கு பவ்ரல் அமைப்பின் தேசிய நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் இந்துவின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் இஷாக் ஆகியோர் கலந்து விளக்கமளித்தார்கள்.

அங்கு மேலும் சத்யராஜ் பேசுகையில் -

நிதியின்மை போன்ற காரணங்களைக் காட்டி உள்ளூராட்சி தேர்தல் பின்போடப்பட்டது. இருந்தபோதிலும் எதிர்வரும் ஒக்ரோபரில் தேர்தல் நடத்தியாக வேண்டும் . அதற்கு முன்பு நாடாளுமன்ற தேர்தல் நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

எனவே நாம் 25 மாவட்டங்களிலும் மக்கள் விழிப்புணர்வு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

மார்ச் 12 இயக்கம் தூய்மையான அரசியலுக்காக செயற்படுகிறது. சிறந்த நாட்டை கட்டி எழுப்புவோம் .

நாம் எமது வாக்குகளை அறிவு பூர்வமாக பயன்படுத்த வேண்டும். தகுதியானவர்களை மாத்திரமே நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்து அனுப்ப வேண்டும். இதுவே எமது தலையான கடமையாகும்.

மார்ச் 12 இயக்கத்தின் குறிக்கோளின் படி எட்டு தகுதிகள் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வேட்பாளருக்கு இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த எட்டு தகுதிகளும் இருக்கின்றவர்களுக்கு தான் வேட்புமனு தாக்கல் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். கட்சிகளும் அனுமதி அளிக்க வேண்டும்.

நீங்கள் கலந்து கொள்வது நாட்டின் கொள்கை வகுப்பு மற்றும் நாட்டின் நிதி முகாமைத்துவ த்துக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்கின்ற தேர்தலாகும்.

உங்களது பிரதிநிதியைத் தெரிவு செய்கின்ற உரிமை உங்களுக்கு இருக்கிறது. நாடாளுமன்ற தேர்தல் எடுக்கின்ற முடிவு அடிப்படையில் நாட்டின் கிராமத்தின் மற்றும் உங்களது நகரத்தின் எதிர்காலமும் உங்களது பிள்ளைகளின் எதிர்காலமும் தங்கி உள்ளது .

ஆகவே பெறுமதியான உங்களது வாக்கினை அளிப்பதற்கு முன்னர் உங்கள் பிரதிநிதியை சரியாக கண்டு கொள்ளுங்கள்.

இதற்காக 25 மாவட்டங்களிலும் மார்ச் 13ஆம் தேதி விசேட வேலை திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது.

தொடர்ச்சியாக மார்ச் 28 ஆம் திகதி கொழும்பு விகாரமாதேவிதேவி பூங்காவில் இலங்கையில் இருந்து வருகின்ற அனைத்து பிரதிநிதிகளும் ஒன்று கூடி பாரிய புதிய அரசியல் தூய அரசியல் நடத்துவதற்கு முன்ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது .

தகுதியாக நாடாளுமன்ற உறுப்பினர்களை தகுதியானவர்களை நாடாளுமன்றத்திற்கு தேர்வு செய்து நாட்டையும் வீட்டையும் பலப்படுத்துவோம். - என்றார்.

பின்னர் அம்பாறை மாவட்டத்திற்கான இணைப்பாளராக கந்தையா சத்யநாதன் தேர்வு செய்யப்பட்டார். கூடவே உறுப்பினர்களாக 15 பேர் செய்யப்பட்டார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்ட 25 கிராமங்களை சேர்ந்த தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் அவர்களது கருத்துக்களைக் கூறினார்கள். (05)

# பலருக்கு தொழில் வழங்குனராக மாறுகின்ற கல்விமுறையில் கவனம் செலுத்தவேண்டும்

## கிழக்கின் கேடயம் அறிவுரை







(நூருல் ஹுதா உமர்)

நாம் முயற்சிக்காதவிடத்து எந்த மாற்றமும் நிகழாது.

மாற்றத்துக்கான முதல் அடியை எடுத்து வைக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம் என அக்கறைப்பற்று அனைத்து பள்ளிவாசல்களின் முன்னாள் தலைவரும் கிழக்கின் கேடயத்தின் தலைவருமான எஸ். எம். சபீஸ் தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேச இளைஞர்கள் சந்திப்பு கிழக்கின் கேடயம் நாவிதன்வெளி கிளைத் தலைவர் ஏ.எல்.எம். அர்சாத் தலைமையில் நடைபெற்ற போது அங்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், இன்னொருவருக்கு அநியாயம் செய்யாமல் தமது வாழ்க்கைக்குத் தேவையான வருமானத்தை தேடிக்கொள்வது கல்வியின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். வாலிப வயதில் கல்வியைத்தவிர வேறு எந்த சிந்தனைக்கும் இடம்கொடுக்கக்கூடாது. அதேநேரம் சுயமாக தொழில் தொடக்கி பலருக்கு தொழில் வழங்குனராக மாறும் கல்விமுறையில் நாம் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டும்.

அத்தோடு சமூக அக்கறை கொண்டவர்களாகவும் நாம் இருக்க வேண்டும். உங்களில் இருந்து நல்ல தலைவர்கள் உருவாகிநமது மக்களை நன்றாக வாழவைக்கக் கூடியவர்களாக மாறவேண்டும். இன்று நாம் நமது மக்கள் படுகின்ற துன்பங்களுக்கு மூல காராணம் சரியான தலைவர்களை நாம் உருவாக்க தவறியமைதான். ஆகவே அதிலும் நாம் கவனத்துடன் அக்கறை செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

(05)

# கிண்ணியா மத்திய கல்லூரிக்கு பஸ் வழங்கிய சஜித் பிரேமதாஸ







(கிண்ணியா நிருபர்)

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவால் கிண்ணியா மத்திய கல்லூரிக்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பஸ் வழங்கி வைக்கப்பட்டது.

சஜித் பிரேமதாஸவின் பிரபஞ்சம் வேலை திட்டத்தின் கீழ் இந்த பஸ் வழங்கி வைக்கப்பட்டது.

கல்லூரியின் அதிபர் ஏ.எச்.எம். நஜாத் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ஷூப் கல்வி அதிகாரிகள் பிரதேச செயலாளர் பிரிவின் அதிகாரிகள் உட்படப் பலன் கலந்து கொண்டனர்.

நீண்டகாலத் தேவையாக இருந்த பஸ் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹஷூப் வேண்டுகோளுக்கிணங்க ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவால் வழங்கி வைக்கப்பட்டது.(05)

# திருமலை சர்வமதக் குழுவின் சர்வதேச மகளிர்தின நிகழ்வு

(ஹஸ்பர் ஏ.எச்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் திருகோணமலை பிரதேச சர்வ மத குழு உடன் இணைந்து 'மதங்களில் மகளிர்' என்னும் தொனிப்பொருளில் மகளிர் தினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இதன் போது மகளிர் உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பான விழிப்புணர்வு உரையும் இடம்பெற்றது.

மேற்படி, நிகழ்வு கிண்ணியாவில் அமைந்துள்ள சேவிங் ஹியூமானிட்டி பவுண்டேஷனின் ஒருங்கிணைப்பில் திருகோணமலை ஜுப்ளி மண்டபத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பங்கேற்பாளர்களுடன் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம வளவாளராக சட்டத்தரணி பாத்திமா நஸ்ரின் கலந்துகொண்டு இலங்கையில் காணப்படும் மகளிர் உரிமைகள் மற்றும் அவர்களின் சலுகைகள், அது மீறப்படும் போது முறைப்பாடு செய்வதற்கான வழிமுறைகள் மற்றும் அணுகுமுறைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வு கருத்தரங்கும் இதன் போது இடம் பெற்றது.

மேலும், இந்நிகழ்வில் திருகோணமலை பிரதேச சர்வமதக்குழு உறுப்பினர்கள், மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள் என பல்லின மக்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், சேர்விங் ஹியுமானிட்டி பவுண்டேஷன் உடைய பிரதம நிறைவேற்று அதிகாரி, மற்றும் அதனது பொதுச் செயலாளர், மற்றும் அதனது ஊழியர்களும் இதன் போது கலந்து கொண்டிருந்தனர்.

இறுதியாக பெண்களுக்கான ஒரு வலையமைப்பு ஒன்றும் உருவாக்கப்பட்டது.இதன் மூலம் நிறுவனத்தின் எதிர்கால செயற்பாடுகள், பெண்கள் நலன் திட்டங்கள் அவர்களுக்கான வாய்ப்புக்களை பகிர்ந்து கொள்ளும் தளமாகவும் இது செயல்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(05)

# புதிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவராக முஸம்மில் அபூசாலி நியமனம்

(பாறுக் ஷிஹான்)

புதிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவராக முஸம்மில் அபூசாலி நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமன கடிதத்தை கட்சியின் சிரேஷ்ட ஆலோசகர் முபாறக் முப்தி வழங்கி வைத்தார்.இதன் போது குறித்த நிகழ்வில் புதிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் அவைத் தலைவர் இப்ராகீம் அமீர் மௌலவியும் கலந்து கொண்டார்.

மேலும் குறித்த நியமனக்கடிதம் வழங்கும் வைபவமானது நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கட்சியின் சிரேஷ்ட ஆலோசகர் முபாறக் முப்தி தலைமையில் நடைபெற்றதுடன் பல கட்சிகள் உருவாகி பல நல்ல தலைவர்களும் உருவாக வேண்டும். அப்போதுதான் ஏக போக கட்சிகளை



ஒழிக்க முடியும் என கட்சியின் சிரேஸ்ட ஆலோசகர் முபாறக் முப்தி குறிப்பிட்டமை சுட்டிக்காட்டத்தக்கது.

(05)

# சிங்கள பௌத்த அராஜக வடிவமே வெடுக்குநாறி மலைத் தாக்குதல்

## யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கண்டனம்

வெடுக்குநாறிமலையில் இடம்பெற்றிருக்கும் சம்பவம் வெறும் வன்முறையும், அத்துமீறலும் மாத்திரம் அல்ல இது இலங்கையில் தொடரும் சிங்கள பௌத்த மேலாண்மைவாதக் கருத்தியலின் ஆகப்பிந்திய வன்முறை வடிவங்களிலே ஒன்று என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

சமயக் குருக்கள், பொதுமக்கள், அரசியல் தலைவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட அத்துமீறல்களையும் பலரைக் கைது செய்தமையையும் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

கடந்த மகா சிவராத்திரி தினத்தன்று இரவு வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் தலத்திலே வழிபாட்டிலே ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயக் குருக்கள், பொதுமக்கள், அரசியல் தலைவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட அத்துமீறல்களையும், அவர்கள் அங்கு இருந்தோரிலே பலரினைக் கைது செய்தமையையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மகா சிவராத்திரி சைவ, இந்து மக்களுக்கு மிகவும் முக்கியமான தினங்களிலே ஒன்று. அந்தத் தினத்திலே உலகெங்கும் வாழும் சைவ, இந்து மக்கள் ஆலயங்களிலே இரவு முழுவதும் விழித்திருந்து சமய அனுட்டானங்களிலே ஈடுபடுவர்.

அவ்வாறான ஒரு வேளையிலே பொலிஸார் ஆதி லிங்கேஸ்வரர் தலத்தினுள் நுழைந்து அது தொல்பொருள் ஆய்வுக்குரிய பாதுகாக்கப்பட்ட இடம் என்ற போர்வையிலே அங்கு அனுட்டானங்களிலே ஈடுபட்டிருந்த மக்களிற்கு பல இடையூறுகளை ஏற்படுத்தி இருக்கின்றனர். அவர்களுக்குத் தேவையான குடிநீர் கிடைப்பதைத் தடுத்து நிறுத்தி இருக்கின்றனர். பின்னர் பூசைகளைக் குழப்பி உள்ளனர்.

வழிபாட்டில் ஈடுபட்டோரினை பலவந்தமாக வெளியேற்றியும் கைது செய்துமுள்ளனர். இவை யாவும் அந்த மக்களின் சமய ரீதி யிலான உரிமைகளை மோசமாக மீறும் செயல்களாகும் என்பதனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டுகிறது.

வெடுக்குநாறி மலையில் இடம்பெற்றிருக்கும் இந்தச் சம்பவம் வெறும் வன்முறையும், அத்துமீறலும் மாத்திரம் அல்ல் இது இலங்கையில் தொடரும் சிங்கள பௌத்த மேலாண்மைவாதக் கருத்தியலின் ஆகப் பிந்திய வன்முறை வடிவங்களிலே ஒன்று.

சிறுபான்மையாக இருக்கும் மக்களின் மத உரிமைகளை பாதிக்கும் செயன்முறைகளை இலங்கையை ஆட்சி செய்யும் அரசாங்கங்கள் காலங்காலமாக மேற்கொண்டு வந்திருக்கின்றனர். இந்த செயன்முறைகளால் இந்து சமயத்தவர் மாத்திரமல்லாது, கிறீஸ்தவர்கள், இஸ்லாமியர்களும் பாதிக்கப்பட்டு வந்திருக்கின்றனர்.

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசியல் யாப்பைக் கொண்டிருக்கும் ஒரு நாட்டில், சிறுபான்மை மக்களின் மத உரிமைகளை மீறும் போக்குக்கள் யாப்பின் கருத்தியலுக்குள்ளேயே பொதிந்து போய் இருக்கிறது என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்டுவது அவசியம்.

வெடுக்குநாறி மலைச் சம்பவம் இலங்கை அரசின் மதவாதக் குணாம்சத்தால் ஏற்பட்ட ஒரு கட்டமைப்பு சார் விடயமாகவே பார்க்கப்படல் வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் சமூகங்கள் பெரும்பான்மையாக வாழும் இலங்கையின் வடக்குக் கிழக்கைப் பௌத்த மயமாக்கம் செய்வதன் மூலமும், சிங்கள மயமாக்குவதன் மூலமும் இந்தப் பிராந்தியத்தில் வாழும் தமிழ், முஸ்லிம் சமூகங்களை அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் வலுவிழக்கச் செய்யும் செயன்முறைகளிலே இலங்கை அரசாங்கங்கள் பல தசாப்தங்களாக ஈடுபட்டு வந்திருக்கின்றன. இந்தச் செயன்முறைகளின் ஒரு வடிவமாகத் தொல்பொருளியல் ஆய்வு என்ற போர்வையில் வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் தலத்தையும் ஏனைய பல சைவ, இந்து மக்கள் வழிபடும் தலங்களையும் சிங்கள பௌத்தமயமாக்கும் நடவடிக்கைகள் அண்மைய சில வருடங்களாகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. இராணுவக் கட்டமைப்புக்களின் துணை

கொழும்பில் இருந்து, மையப்படுத்தப்பட்ட முறையிலே, இராணுவக் கட்டமைப்புக்களின் துணையுடன், சிங்கள பௌத்தக் கருத்தியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இந்தத் தொல்பொருளியல் செயன்முறைகளின் போது வடக்குக் கிழக்கிலே பல சந்ததிகளாக இந்தத் தலங்களிலே தமது சமய அனுட்டானங்களில் ஈடுபடும் மக்களின் உரிமைகளுக்கும், கருத்துக்களுக்கும் எந்த விதமான இடமும் வழங்கப்படுவதில்லை.

மாறாக தொல்பொருளியல் ஆய்வு என்பது இந்த மக்களின் மீதும், அவர்களின் சமய நம்பிக்கைகள் மற்றும் செயன்முறைகளின் மீதும் ஒரு வன்முறையாகவே ஏவப்படுகிறது. இந்த வன்முறையின் ஒரு விளைவே கடந்த சிவராத்திரி தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல்களும் கைதுகளும்.

கைது செய்யப்பட்ட அனைவரும் உடனடியாக வழக்குகள் எதுவுமின்றி விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், வடக்குக் கிழக்கிலே தொல்பொருளியல் ஆய்வு என்ற பெயரிலும், வனப் பாதுகாப்பு என்ற பெயரிலும், மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் என்ற பெயரிலும் ஏனைய வடிவங்களிலும் இடம்பெறும் சிங்கள பௌத்த மயமாக்கற் செயன்முறைகள் யாவும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் கோருகிறது.

இனவாதத்தினையும், மதவாத்தினையும் முன்னெடுக்கும் அரசமைப்பும், அரசுக் கட்டமைப்பும் மாற்றப்பட்டால் மாத்திரமே இலங்கையில் வாழும் மக்கள் அனைவரும் இன, சமய ரீதியிலே சமத்துவம் மிக்கவர்களாக வாழ முடியும். வெடுக்குநாறி மலைப் பிரச்சினைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் அனைவரும் இவ்வாறான அரசியல் மாற்றங்களை வலியுறுத்துவதன் மூலமாக இனவாதத்தையும், மதவாதத்தையும் முறியடிக்க முன்வர வேண்டும் என ஆசிரியர் சங்கம் கோருகின்றது. - என்றுள்ளது.(05)

# வெடுக்குநாறிமலை வழிபாட்டுரிமையை மறுக்கும்செயல் உலகிற்கு எமது நிலையை அரசு வெளிப்படுத்துகிறது

## யாழ். பல்கலைக்கழக இந்து மன்றம் கண்டனம்

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் அடிப்படை வழிபாட்டுரிமையை மீறிய செயலானது உலகிற்கு எமது நிலையினை அரசாங்கம் வெளிப்படுத்தி இருக்கிறது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றம், வெடுக்குநாறி மலை ஆதி இலிங்கேசுவரர் கோவில் மகா சிவராத்திரி தின பொலிஸ் அராஜகங்களை கண்டித்து வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் ஜோதியான சிவபெருமானுக்குரிய விரதங்களுள் தலையாய விரதமே மகா சிவராத்திரி, வருடத்தில் ஒருமுறை வரும் இவ் விரதமானது ராத்திரி வேளை நான்கு சாம பூசைகளை மேற்கொண்டு இரவு முழுவதும் சிவனடியார்கள் கண்விழித்து சிவபெருமானை பூஜித்து சிவசிந்தையில் வழிபாடு மேற்கொள்வது மரபாகும்.

இவ் மகாசிவராத்திரி தினத்திதை முன்னிட்டு தொன்று தொட்டு தமிழ்ச் சைவர்கள் வழிபட்டுவரும் வெடுக்குநாறிமலை ஆதி இலிங்கேசுவரர் கோவில் மகா சிவராத்திரி தின விசேட பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு நீதிமன்றம் வழங்கிய கட்டளையின் படி பூசை வழிபாடுகள் ஒழுங்கமைக்கப்ட்டுள்ள நிலையில் ஆலய பூசகர் கைது செய்யப்பட்டமையும், வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொதுமக்களை பலவந்தமாக அகற்றியதுடன் மாலை ஆறு மணியளவில் அங்கிருந்து அனைவரையும் வெளியேறுமாறு பணித்துள்ளனர்.

சைவர்களின் வழிபாட்டு உரிமையினையும், சைவ விழுமியங்களையும், புனித சடங்குகளையும் அவமதிக்கும் சம்பவங்கள் தமிழர்களின் தொன்மையான புனித பூமியில் இடம்பெற்றிருக்கிறது. அதன் உச்சகட்டமாக வெகுதூரத்தில் இருந்து வந்து விரதமிருந்து பூசை வழிபாட்டில் ஈடுபட்டிருந்த பக்தர்களது வழிபாடுகளை தடுத்தும், வழிபாட்டில் ஈடுபட்ட பெண்களை கழுத்தை பிடித்து இழுத்து வீசியதுடன், தவறேதும் செய்யாத சிவனடியார்கள் விரதமிருந்து பூசையில் ஈடுபட்ட தருணம் மோசமாக கைதுசெய்யப்பட்டு தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், சப்பாத்துக் கால்களுடன் வழிபாட்டிடதுக்குள் நுழைந்து பூசை மற்றும் படையல் பொருட்களையும் பொலிசார் காலால் அப்புறப்படுத்தியதுடன், கோவிலில் நிகழ்ந்து கொண்டிருந்த யாகத்தையும் தடுத்து நிறுத்தியது போன்ற பொலிசாரது மிலச்சத்தனமான செயலானது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

ஆலய வளாகத்திற்கு குடிநீர் தாங்கியை உள்ளே அனுமதிக்காது வழிபாட்டிற்கு சென்ற சிறுவர்கள் பெண்கள் பக்தர்கள் எனப் பலர் அவதிப்பட்ட நிலையில் ஆலய வழிபாட்டிற்காக பக்தர்களின் தாகசாந்திக்கு கொண்டுவரப்பட்ட நீர் தாங்கியை பொலிஸாரால் ஆலயத்தில் இருந்து மூன்று கிலோமீற்றருக்கு முன்னரே தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததும், குடி தண்ணீருடன் ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்ட உழவு இயந்திரத்தை உள்ளே அனுமதிக்காது அதனை உள்ளே அனுமதிக்குமாறு பக்தர்கள் அரைமணிநேர போராட்டத்தை மேற்கொண்டமையும் குடிநீரை தடுத்து அடிப்படை தேவைகளில் ஒன்றான குடிநீரை வழங்க மறுத்த ஈனச் செயலானது இலங்கை பொலிஸாரது மனிதநேயமின்மையை குறித்து ஒட்டுமொத்தமாக மிகுந்த வேதனைக்குள்ளாக்கி இருக்கிறது.

இலங்கையில் சமய நல்லிணக்கம் வலியுறுத்தப்பட்டு வரும் சூழலில் இந்த செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பது மத நல்லிணக்கம் தொடர்பான ஐயப்பாடுகளை ஏற்படுத்துவதாக இருக்கின்றது. சமயங்கள் மனிதனை அக ரீதியாக மேம்படுத்தக்கூடியன வழிபாடுகளும் இறை சார்ந்த நம்பிக்கைகளும் மனிதனை மனிதனாக பக்குவப்படுத்துகின்றனவே தவிர ஒரு மதத்தை மத வழிபாட்டினை நிந்திப்பதோ நிந்தனை செய்வதோ அல்லது தடுத்து நிறுத்துவதோ பொருத்தமற்ற ஒன்றாகவே கருதப்படும், சமயங்கள் சார்ந்த அரசியல் என்பது மக்களை முரண்பட்டுக் கொள்ளவும் இனரீதியாக பிளவுபடுத்திக்கொள்ளவும் வழிசமைக்கும். ஆகவே, சமயங்கள் மனிதர்களை பக்குவப்படுத்திக் கொள்வது எனும் வகையில் ஒவ்வொரு இனம்சார்ந்தவர்களும் பல்வேறுபட்ட நம்பிக்கைகளுடன் வாழ்ந்து வருகிறார்கள்.அவர்களுடைய நம்பிக்கைகள், வழிபாடுகள், வழிபாட்டுத்தலங்கள் சிதைக்கப்படுவதோ அல்லது அவர்களுக்கான வழிபாடுகள் மறுக்கப்படுவதோ, ஒரு சுதந்திரத்தன்மை என்பது வழிபாட்டு முறையில் தடுக்கப்படுகிறது என்பது தான் அர்த்தமாகக் கருதப்படும்,

இந்த அடிப்படையிலே சைவர்களுடைய மிக முக்கியமான ஒரு வழிபாடு சிவராத்திரி தினம். இந்த வழிபாட்டில் இவ்வாறான அசம்பாவிதங்கள் நடைபெற்றது என்பது உண்மையில் சைவர்களாகிய ஒவ்வொருவரையும் மிகவும் மனரீதியாக வேதனைப்படவைக்கிறது, அவர்களுடைய வழிபாடுகளை சிதைப்பதனூடாக ஓர் இனத்தினுடைய பண்பாட்டு அடையாளங்களை கேள்விக்குட்படுத்துதல் என்பது உண்மையிலே ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்றாகவே இருக்கிறது. இந்த அடிப்படை வழிபாட்டுரிமையை மீறும் செயலானது உலகிற்கு எமது நிலையை இந்த அரசாங்கம் வெளிப்படுத்தி இருக்கிறது. இவ்வகையில் வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேசுவரர் கோவிலில் நடைபெற்ற மோசமான வழிபாட்டுரிமை மீறல் மற்றும் மனிதநேயமின்மை சம்பவங்களை மிக கண்டித்தும் கைதுசெய்ப்பட்ட பக்தர்களை விடுவிக்ககோரியும் வலியுறுத்தி நிற்கின்றோம். இலங்கை பொலிஸாரது அட்டூழியங்களையும், இலங்கை அரசின் இவ்வாறான செயலை இந்து மன்றமாக கண்டித்து நிற்கின்றோம் - என்றுள்ளது. (05)

# சர்வதேச மகளிர் தினம் திருமலையில் நிகழ்வு!







(கிண்ணியா நிருபர்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணியளவில் திருகோணமலை இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்எஸ் தவ்பீக், கபில நுவான் அதுக் கோரல, முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், உள்ளிட்டோருடன் பெருந்தொகையான மகளிர்கள் கலந்து கொண்டனர்.

சிறந்த சிறப்பான மகளிருக்கான வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டுள்ளன. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சாய்ந்தமருது காரியப்பர் வித்தி: இல்ல விளையாட்டுப் போட்டி





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது வொலிவேரியன் எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டி கல்லூரியின் திறந்த மைதானத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்வி பணிமனையின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம். எச்.எம்.ஜாபிர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம். ஆரிப் தலைமையில் கோலாகலமாக நடைபெற்ற இந்நிகழ்வில், கௌரவ அதிதிகளாக சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ. மலிக், எம்.எச். றியாஸா, பி.ஜிஹானா ஆலிப், பாடசாலையின் ஏ.றாசிக், ஆரம்பக்கல்வி வளவாளர் எஸ். எம்.எம்..அன்சார், ஆஸிப் சோறூம் உரிமையாளர் எஸ்.எச்.ஜிப்ரி, பாடசாலையின் முன்னாள் ஸ்தாபக அதிபர் ஐ.எல்.ஏ. நாபித் உட்பட சாய்ந்தமது பிரதேசத்தின் ஏனைய பாடசாலை அதிபர்களான எம்.ஐ. சம்சுதீன், அஸ்மி, அஸ்தர், சைபுதீன், கிராம உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

சிறப்பானதொரு ஒன்றுகூடலாக நடந்த இந்த இல்ல விளையாட்டுப் போட்டி போன்று இதுவரை எந்த இல்ல விளையாட்டு போட்டியும் பிரதேசத்தில் இடம் பெறவில்லை.

இந்த இல்ல விளையாட்டுப் போட்டியானது மக்களை பாடசாலையினுள் ஒன்று சேர்ப்பதற்கு வழிவகை சமைத்தது என்றும் இந்தப் பாடசாலையின் உயர்வுக்காகவும் மாணவர்களின் கல்வியின் உயர்வுக்காகவும் இந்த செயற்பாட்டை ஊக்குவிக்கும் விதமாக நாங்கள் இதனைச் செய்தோம் எனவும் பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம். ஆரிப் தெரிவித்தார்.

தற்பொழுது மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரி யர்கள், பாடசாலை சமூகம் என்பன கூட்டிணைந்து இந்தக் கல்வித் திட்டத்தை செயற்படுத்த இருக்கின்றோம். அந்த அடிப்படையில்

இந்நிகழ்வை சிறப்பாக்கி சகல வழிகளிலும் ஒத்துழைத்த பிரதம அதிதி, கௌரவ அதிதிகள், சிறப்பு அதிதிகள், ஏனைய அதிதிகள், ஊடகவியலாளர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எல்லோருக்கும் அதிபர் நன்றி தெரிவித்தார்.

மாணவர்களின் மனநிலையும் நடத்தையும் பார்க்கின்ற போது, அவர்கள் இவ்வாறான ஒரு விளையாட்டு நிகழ்ச்சியை மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள் என்பதை அவர்கள் மக்களோடு மக்களாக, பாடசாலை ஆசிரியர்களோடு ஆசிரியர்களாக, ஒன்றித்து செயற்பட்டதைப் பார்க்கின்ற போது காணக்கூடியதாக இருந்தது.

இந்த விழாவின் சிறப்பு அம்சம் என்னவென்றால், பெற்றோர்களும் கிராமத்தில் உள்ள அபிவிருத்தி அடைந்துவரும் மக்களும் பக்கபலமாக இருந்து விழா வெற்றி பெற செயற்பட்டார்கள். அத்தோடு, இந்தப் பாடசாலையில் மக்களை உள்ளெடுக்கின்ற செயற்பாடாகவே இடம் பெற்றது. அந்த வகையில் அனைத்து மக்களும் விளையாட்டு நிகழ்ச்சி எனும்போது சிறப்பாக முன்வந்து செயற்பட்டார்கள்.

எனவே மக்களை, பெற்றோர்களை பாடசாலையில் உள்ளெடுக்கும் முயற்சியாக இடம்பெற்ற இந்த இல்ல விளையாட்டுப்போட்டி மிகவும் சிறப்பானதொரு வெற்றியாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதன்போது அட்லஸ் எனப்படும் நீல அணி 116 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும் ஒலிம்பஸ் எனப்படும் மஞ்சள் அணி 114 புள்ளிகளைப் பெற்று இரண்டமிடத்தையும் எவரெஸ்ட் எனப்படும் பச்சை அணி மூன்றாமிடத்தையும் பெற்று வெற்றிக் கேடயங்களை தனதாக்கிக் கொண்டனர்.

இதன்போது வொலிவோரின் கொமன் சொசைட்டி எனும் அமைப்பு மாணவர்களைப் பயிற்றுவிப்பதில் பூரண பங்களிப்பு வழங்கியிருந்தனர்.

(05)

# சமத்துவக் கட்சியின் மகளிர் தின நிகழ்வு





சமத்துவ கட்சியின் மகளிர் தின நிகழ்வுகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் சிறப்புற இடம் பெற்றன.

சமத்துவக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேஷ் சந்திரகுமாரும் சிவில் அமைப்புகளில் பிரதிநிதிகள் பெண்கள் அமைப்புகள் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டதுடன் கலைநிகழ்வுகளும் நடைபெற்றன.

(05-113)

# 2024 சர்வதேச மகளீர் தின நிகழ்வுகள் கிழக்கு இளைஞர் அமைப்பு ஏற்பாட்டில்







(பாறுக் ஷிஹான்)

2024 சர்வதேச மகளீர் தினத்தை முன்னிட்டு கிழக்கு இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் நிகழ்வு ஒன்று காரைதீவு தனியார் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி நிகழ்வு கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும் முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் தாணீஸ் ரஹ்மதுல்லாஹ் தலைமையில் நடைபெற்றதுடன் பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சகீலா இஸ்ஸத்தீனும் கௌரவ அதிதிகளாக மயோன் நிறுவனத்தின் பணிப்பாளரும் ரிஸ்லி முஸ்தபா கல்வி அபிவிருத்தி அமைப்பின் தலைவருமான ரிஸ்லி முஸ்தபா காரைதீவு பிரதேச சுகாதார அதிகாரி வைத்தியர் தஸ்லீமா வஸீர் கல்முனை கல்வி வலய பிரதி கல்வி பணிப்பாளர் ஜிஹானா அலீப் அம்பாறை மாவட்ட மகளீர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சுரேக்கா எதிரிசிங்க ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் சிறப்பு அதிதிகளாக ஈஸ்ரன் சோசியோ அபிவிருத்தி அமைப்பின் தலைவி கலாநிதி வாஹிதா முகைதீன் இம்தியாஸ் காரியப்பர் கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் ஆலோசகரும் அதிபருமான றிப்கா அன்ஸார் றிஸ்லி முஸ்தபா கல்வி அபிவிருத்தி அமைப்பின் செயலாளரும் திடீர் மரண விசாரணை அதிகாரியுமான ஏ.எச்.அல் ஜவாஹிர் நிந்தவூர் பிரதேச மகளீர் அபிவிருத்தி உத்தியோகத்தரும் கிழக்கு இளைஞர் அமைப்பின் ஆலோசகருமான ஏ.ஆர் றிஸ்வானுல் ஜன்னாஹ், குடியகல்வு ஆலோசகர் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் வினோத்குமார் கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் ஆலோசகர் ஆயிசா பானு ஹஸன் உள்ளிட்ட ஏனைய பிரமுகர்கள் கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் உயர்பீட உறுப்பினர்கள் எழுத்தாளர்கள் அறிவிப்பாளர்கள் ஊடகவியலாளர்கள் சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி நிகழ்வானது மத அனுஸ்டானத்துடன் ஆரம்பமாகி தேசிய கீதம் வரவேற்புரையை கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் எம்.ஐ.எப்.சஜீனாவும் தலைமை உரையை கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும் முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் தாணீஸ் ரஹ்மதுல்லாஹ் மேற்கொண்டார். தொடர்ந்து கவிதை மகளீர் தின விசேட உரை கிழக்கு இளைஞர்கள் அமைப்பின் உறுப்பினர்களுக்கான அடையாள அட்டை வழங்கும் நிகழ்வுகள் உட்பட மகளீர் தின நினைவு மலர் வெளியீடு அதிதிகளால் வெளியீட்டு வைக்கப்பட்டது.

பின்னர் அதிதி உரை சிறப்பு பேச்சு கௌரவ அதிதி உரை பிரதம அதிதி உரை விருது வழங்கல் நிகழ்வு என்பன தொடர்ச்சியாக இடம்பெற்று நன்றி உரையை எம்.ஆதிக் மேற்கொண்டு நிகழ்வு சிறப்பாக நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

# கிழக்கு மாகாண ஆளுநர் ஏற்பாட்டில் திருகோணமலையில் மகளிர் தினம்







(அபு அலா)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் திருகோணமலை திருக்கோணேஸ்வரா இந்து கல்லூரி மைதானத்தில் மகளிர் தின நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது. இந்நிகழ்வில் இந்தியாவின் பாரத் பயோடெக் இன்டர்நேஷனல் லிமிடெட்டின் இணை நிறுவனரும் இயக்குனருமான திருமதி சுசித்ரா எல்ல பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

திருமதி சுசித்ரா எல்ல கோவிட் காலப்பகுதியில் கொவிட் தடுப்பூசியை கண்டுபிடித்து, 600 பில்லியன் கொவிட் தடுப்பூசிகளை தயாரித்து மக்கள் உயிரைக் காத்த உன்னத பெண்ணை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் “ஹுழசடனள ஆழளவீழறநசகரட றுழஅயெ” எனும் விருதை வழங்கி கௌரவித்தார்.

அத்துடன், 1880 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மலையகப் பெண் ஒருவர் தேயிலை பறிக்கும்போது எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திருமதி சுசித்ரா எல்லவுக்கு அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் திருகோணமலையில் கல்வித்துறையில் சாதித்த பெண்கள், சுரசயட னநஎநடழிஅநவெ ளழஉைநவல, பெண்கள் அமைப்புகளில் சாதனைகள் நிலை நாட்டிய பெண்கள், கலாசார நிகழ்வுகளில் சாதனை படைத்த பெண்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் பாராட்டப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான கபில நுவான் அத்துகோரல, எம்.எஸ் .தௌபிக், பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க உள்ளிட்ட அரச உயரதிகாரிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (05)

## புதுக்குடியிருப்பில் சிக்கியது கஞ்சா படைய அதிகாரியுடன் இளைஞன் கைது

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு உடையார்கட்டு பகுதியில் சனிக்கிழமை பிற்பகல் கேரளா கஞ்சாவுடன் இராணுவ அதிகாரி மற்றும் இளைஞர் ஒருவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்தச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதோடு, இவர்களிடமிருந்த 10 கிராம் கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். தேராவில் தேக்கங்காடு இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவ புலனாய்வு பிரிவைச் சேர்ந்த 40 வயதுடைய சார்ஜன்ட் மேஜரையும், உடையார்கட்டு தெற்கைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரையுமே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரையும் சனிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரியின் முன்னிலையில் நிறுத்தியபோது இருவரும் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக சட்ட வைத்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வரும் அதேவேளை, சந்தேக நபர்கள் முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (05)

## அலகல்ல மலையிலிருந்து தவறி வீழ்ந்த பல்கலை மாணவர் வைத்தியசாலையில்

அலகல்ல மலையிலிருந்து தவறி விழுந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) சிகிச்சைக்காக மாவனல்லை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வயம்ப பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வருடத்தில் கல்வி கற்கும் கல்முனை பிரதேசத்தில் வசிக்கும் 21 வயதுடைய பல்கலைக்கழக மாணவனே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று மாணவர் குழுவுடன் அலகல்ல மலையில் ஏறச் சென்றபோதே குறித்த மாணவன் தவறி விழுந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இளைஞனை மீட்கும் நடவடிக்கையில் பெரகலை இராணுவ முகாமின் அதிகாரிகள் ஈடுபட்டனர் .

காயமடைந்த பல்கலைக்கழக மாணவியின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## இந்து சமுத்திர எல்லை நாடுகளின் ஒன்றிய கொண்டாட்டம் காலியில்

‘எதிர்கால சந்ததியினருக்கான நிலையான இந்து சமுத்திரத்தை உறுதி செய்தல்’ எனும் தொனிப்பொருளில் நேழிற்று கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான இந்து சமுத்திர எல்லை நாடுகளின் ஒன்றிய தினக் கொண்டாட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கலந்துகொண்டார்.

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் ஒன்றியம் எனப்படும் ஐயோரா (ஐழுசுயு) சங்கம்1997 இல் நிறுவப்பட்டு,27 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாடும் விதத்தில் இந்த நிகழ்வு ஏற்பாடு சச்யயப்பட்டிருந்தது.

சதுப்புநில சுற்றுச்சூழலை மீளமைப்பதற்கான முன்முயற்சிகளுக்காக கடந்த மாதம் ஐக்கிய நாடுகளின் முக்கிய மறுசீரமைப்பு விருது இலங்கைக்கு வழங்கப்பட்டது.

அதன்படி, சமுத்திர பாதுகாப்பு மற்றும் அதன் நிலையான அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் முன்னணி நாடாக இலங்கை மாறியுள்ளது. இந்தத் தருணத்தில், 2024 ஆம் ஆண்டிற்கான இந்து சமுத்திர எல்லை நாடுகளின் ஒன்றிய தினத்தை இலங்கையில் நடத்துவது விசேட அம்சமாகும்.

பல்வேறு செயற்பாடுகளுடன் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களின் பங்குபற்றுதலுடன் இந்தக் கொண்டாட்டம் நடைபெற்றது. பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த பாடசாலை மாணவர்களுடன்ஜனாதிபதிசிநேகபூர்வமாக உரையாடியதுடன் அமைப்பின் உறுப்பு நாடுகளின் தூதரகங்களினாலும் அரசு நிறுவனங்களினாலும் நிறுவப்பட்ட கண்காட்சிகூடங்களையும்பார்வையிட்டார்.

முப்படை வீரர்களின் பரசூட் கண்காட்சி இந்த நிகழ்வை வண்ணமயமாக்கியதுடன், பொலிஸ் குதிரைப்படை பிரிவின் குதிரைப்படைக் கண்காட்சியும் இடம்பெற்றது.

’எதிர்கால சந்ததியினருக்கு நிலையான இந்து சமுத்திரத்தை உறுதி செய்தல்’ என்ற தொனிப்பொருளில் தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் நடைபெற்ற ஓவியம் மற்றும் சமூக ஊடகப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

2024 ஆம் ஆண்டில், இந்து சமுத்திர எல்லை நாடுகளின் ஒன்றியத்தின் 27 வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் கடல்வாழ் உயிரினங்களின் வடிவத்திலான அழகான பட்டங்களும் வானில் பறக்கவிடப்பட்டன.

அயலுறவுத்துறை அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, இந்து சமுத்திர எல்லை நாடுகளின் ஒன்றியச் செயலாளர் நாயகம் சல்மான் அல் பாரிசி, உறுப்பு நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள், இராஜதந்திர அதிகாரிகள், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள், பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## புதுக்குடியிருப்பு பொலிஸாரால் மரக் கடத்தல் முயற்சி முறியடிப்பு

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதியில் சட்டவிரோதமாகத் தேக்கு மரகுற்றிகளை கடத்த முற்பட்ட வாகனத்தின் சாரதி பொலிஸார் கைது செய்துள்ளனர். சனிக்கிழமை மாலை இந்த கடத்தல் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். புதுக்குடியிருப்பு பகுதியில் பட்டா ரக வாகனத்தில் தேக்கு மரக்குற்றிகளை கடத்துவதாகப் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தக வலின் அடிப்படையில் இவர் கைதானார். இந்தநிலையில் 13 தேக்கு மர குற்றிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அவை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டன. (05)

## களுத்துறை கடற்கரையில் பெண்ணின் சடலம் மீட்பு

களுத்துறை கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் சனிக்கிழமை இரவு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது .

களுத்துறை தெற்கு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் களுகங்கை வாய்க்காலை அண்மித்த கடற்கரையில் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 35 வயதுடையவர் எனவும் சடலம் இரண்டு நாள்களாக நீரில் மூழ்கியிருக்கலாம் என தெற்கு களுத்துறை பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சடலம் களுத்துறை போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெற்கு களுத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## பாதையில் மரம் முறிந்து வீழ்ந்ததால் மலையக ரயில் சேவைகள் பாதிப்பு

*நாவலப்பிட்டி மற்றும் இங்குரு ஓயா ரயில் நிலையங்களுக்கு இடையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) ரயில் பாதையில் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததால் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.*

*பதுளையிலிருந்து இயக்கப்பட்ட விசேட அதிவேக ரயில் ஏற்கனவே இங்குரு ஓயா ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ள நிலையில் குறித்த மரத்தை அகற்றும் பணியில் ரயில்வே ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். (05)*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.03.2024இல் வெளியிடப்பெற்றது.